விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 27
ஒலி 006 வள்ளுவர் ஆண்டு 2056 மார்கழி 10 வியாழக்கிழமை (25.12.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## புதிய கல்விச் சீர்திருத்தம் ஜனவரி மாதம் சாத்தியமில்லை

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித்



(கொழும்பு)

எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் புதிய கல்வி சீர்திருத்தத்தை அமுல்படுத்துவது நடைமுறைக்கு சாத்தியமில்லை என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியால் முன்னெடுக்கப்பட்டு வரும் மூச்சுத்

04ஆம் பக்கம் பார்க்க

## பொலிஸ் துரத்திய கார் நவாலியில் விபத்து

### மூவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் பொலிஸார் துரத்தி வந்த கார் ஒன்று நவாலி மூத்தநயினார் ஆலயத்துக்கு முன்பாக விபத்துக்குள்ளானதில் மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்றிரவு 8.15 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நேற்றிரவு மானிப்பாய்

15ஆம் பக்கம் பார்க்க




# தமிழர்களின் காணியிலேயே தையிட்டி விகாரை அமைப்பு

### நயினாதீவு விகாராதிபதி குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களின் காணியை தைகப்பற்றியே தையிட்டி திஸ்ஸ விகாரை அமைக்கப்பட்டுள்ளது என நயினாதீவு நாகவிகாரையின் விகாராதிபதி நவதலகல பத்ம தேரர் குற்றம் சுமத்தியுள்ளார்.

(16ஆம் பக்கம் பார்க்க)



## தெற்குக் கடலில் ரூ.200 கோடி பெறுமதியான போதைப்பொருள்

(கொழும்பு)

டிக்கோவிட்ட மீன்பிடித் துறைமுகத்துக்கு கொண்டு வரப்பட்ட கடற்படையினரால்

16ஆம் பக்கம் பார்க்க

## பருத்தித்துறை இன்பர்சிட்டி கடற்கரையில் சடலம் மீட்பு

(கரணவாய்)

வெளிநாட்டவர் எனக் கருதப்படும் இனம் தெரியாத ஆண் ஒருவரின் சடலம் பருத்தித்துறை இன்பர்சிட்டி கடற்கரையில் நேற்று கரையொதுங்கியுள்ளது.

சம்பவ இடத்திற்குச் சென்ற பருத்தித்துறை திடீர் மரண விசாரணை அதிகாரி திருமதி அன்ரலா வின்சன் தயான் விசாரணைகளை மேற்கொண்டார்.

45 தொடக்கம் 50 வயது வரை மதிக்கத்தக்க ஆணின் சடலம் நீல நிற ரீ சேட்டும் அதன் பொக்கட்டில் பாம்பு

15ஆம் பக்கம் பார்க்க

## பேரிடரால் பாதிக்கப்பட்ட மீன்பிடியை மறுசீரமைக்க ரூ.7,649 மில்லியன் ஒதுக்கீடு

### கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகர்



(கொழும்பு)

வெள்ளப்பெருக்கினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள இலங்கையின் மீன்பிடித் தொழிலை மீளக் கட்டியெழுப்புவதற்காக 7,649 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாக கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே

15ஆம் பக்கம் பார்க்க

## கஞ்சா செடி வளர்த்தவர் வவுனியாவில் கைது

(வவுனியா)

வவுனியா மடுக்கந்த பகுதியில் காணி ஒன்றில் கஞ்சா செடி ஒன்றை பயிரிட்டு வளர்த்த ஒருவரை கைது செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து மடுகந்தப் பகுதியில் வவுனியா தலைமை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரகீத் தலைமையில் மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனை நடவடிக்

15ஆம் பக்கம் பார்க்க

## 15 மாடுகள் யாழில் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபையின் ஆளுகைக்குட்பட்ட பண்ணைப் பகுதியில் உள்ள கொல்களத்தில் அனுமதியின்றி இறைச்சியாக்க தடுத்து வைக்கப்பட்டிருந்த கன்றுக் குட்டிகள் உள்ளிட்ட

04ஆம் பக்கம் பார்க்க

## யாழ்.மண்கும்பானில் சட்டவிரோத மணல் அகழ்வு

### வேலணைப் பிரதேச ஒருங்கிணைப்பு குழுக்கூட்டத்தில் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

மண்கும்பான் பகுதியில் சில நபர்களால் திட்டமிட்ட வகையில் முன்னெடுக்கப்படும் சட்டவிரோத மணல் அகழ்வைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என பிரதேச செயலகம் எழுத்து மூலம் கனியவள

15ஆம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## 40வது பொதுப்பட்டமளிப்பு வைபவம் - 2026
## பேராசிரியர் கந்தையா குணரத்தினம் தங்கப்பதக்கம்

பேராசிரியர் கந்தையா குணரத்தினம் தங்கப்பதக்கத்தினை வழங்கும் பொருட்டு கல்வியாண்டுகள் 2021/2022 மற்றும் 2022/2023 இல் பட்டம் பெற்ற யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் விவசாய, பொறியியல், தொழில்நுட்பம் மற்றும் விஞ்ஞான பீடங்களையும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னைய வவுனியா வளாகத்தின் பிரயோக விஞ்ஞான பீடம் மற்றும் தொழில்நுட்பக் கற்கைகள் பீடங்களையும் சேர்ந்த துாய, பிரயோக விஞ்ஞானப்பட்டதாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**தகைமை:-**

எதிர்வரும் 40வது பொதுப் பட்டமளிப்பு வைபவத்தில் பட்டம் பெறவிருக்கும் விஞ்ஞானம், விவசாயம், பொறியியல், தொழில்நுட்பம் மற்றும் பிரயோக விஞ்ஞானத்தில் நான்கு வருட சிறப்புப்பட்டம் அளிக்கப்படவிருக்கும், முதலாம் வகுப்பு அல்லது இரண்டாம் வகுப்பு மேற்பிரிவில் சித்தியடைந்தவர்கள் விண்ணப்பிப்பதற்குத் தகுதியுடையவர்கள்.

**விண்ணப்பப்படிவங்களை கீழ்க்காணும் ஒரு முகவரியில் இருந்து பெற்றுக் கொள்ளலாம்.**

1. சிரேஸ்ட உதவிப்பதிவாளர், கல்வி விவகாரங்கள் மற்றும் வெளியீட்டுக்கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
2. பிரதிப் பதிவாளர், பரீட்சைகள் மற்றும் மாணவர் சேவைகள் கிளை, வவுனியாப் பல்கலைக்கழகம், வவுனியா.
3. பல்கலைக்கழக இணையத்தளம்: www.jfn.ac.lk

**விண்ணப்பப் படிவங்களை சமர்ப்பித்தல்**

பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் யாவும், ஏனைய சான்றிதழ்களுடன் "சிரேஸ்ட உதவிப் பதிவாளர், கல்வி விவகாரங்கள் மற்றும் வெளியீட்டுக்கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்" என்னும் முகவரிக்கு 12.01.2026 திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பக் கடித உறையின் இடது பக்க மேல்மூலையில் "பேராசிரியர் கந்தையா குணரத்தினம் தங்கப்பதக்கத்திற்கான விண்ணப்பப்படிவம்" எனக் குறிப்பிடவும்.

**முடிவுத்திகதி:** 12.01.2026 (திங்கட்கிழமை)

**முக்கிய குறிப்பு:**


- ஏற்கனவே 2025ம் ஆண்டு பங்குனி மாதம் 19ம் ,20ம், 21ம் மற்றும் 22ம் திகதிகளில் நடைபெற்ற 39ஆவது பட்டமளிப்பு விழாவின் போது விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தவர்கள் மீண்டும் விண்ணப்பிக்கத் தேவை இல்லை.
- சரியான, பொருத்தமான தகவல்களை உள்ளடக்காதவையும், தெளிவற்றவையும், பூரணப்படுத்தப்படாதவையும் மற்றும் முடிவுத்திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறுபவையுமான விண்ணப்பங்கள் யாவும் கருத்திற் கொள்ளப்படமாட்டா.

(C-4662)

பதிவாளர்

## மரண அறிவித்தல்

அன்னை மடியில் 11 - 03 - 1948



முத்துமாரி அடியில் 22 - 12 - 2025

## தியாகராசா பத்மநாதன்

மண்டைதீவு 1ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், 02ம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் சிவகுருலேன், கொக்குவில் மேற்கை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட தியாகராசா பத்மநாதன் அவர்கள் கடந்த (22.12.2025) திங்கட்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தியாகராசா - நாகபூரணம் தம்பதிகளின் இளைய மகனும், காலஞ்சென்றவர்களான திருநாயகம் (செல்லமாணிக்கம்) - சங்குவதி தம்பதிகளின் மருமகனும், சௌவுந்தரவனி தேவியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற திவாகரன் (ஆசிரியர்) மற்றும் தயாபரன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் தாட்சாயினியின் (சுவிஸ்) பாசமிகு மாமனாரும் லகிரா, ஆரூத்ரா (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாத்தாவும் காலஞ்சென்ற தில்லைநாதன் மற்றும் யோகநாதன், கிருஷ்ணமூர்த்தி, காலஞ்சென்ற ஸ்ரீரங்கராணி ஆகியோரின் சகோதரனும் சற்குணநாதன், காலஞ்சென்ற ஏரம்பமூர்த்தி, மகேந்திரன் (கனடா), லலிதா தேவி, காலஞ்சென்ற சட்டநாதபிள்ளை, தாமரைச்செல்வி (சுவிஸ்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.12.2025) வியாழக்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மண்டைதீவு தலைக்கீரி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

சிவகுரு லேன்,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

தகவல் : குடும்பத்தினர்
மோகன் - 077 844 9354

(மண்டைதீவில் இருந்து காலை 8.00 மணிக்கு வாகன ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன)

(C-4665)

## மரண அறிவித்தல்



மலர்வு 11.09.1973 உதிர்வு 23.12.2025

## இரத்தினராசா கிருஷ்ணமோகன்

**(Ratna Engineers and Constructors நிறுவன ஸ்தாபகரும் அதன் முகாமைத்துவப்பணிப்பாளரும்)**

யாழ்ப்பாணம் கொக்குவில் மேற்கு, கேணியடி கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் இல.375/3, முத்துத்தம்பிலேன், நாவலர்வீதி, ஆனைப்பந்தியை வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினராசா கிருஷ்ணமோகன் அவர்கள் கடந்த (23.12.2025) செவ்வாய்க்கிழமை அகாலமரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இரத்தினராசா - செல்வராணி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான வீரசிங்கம் - இராசமணி தம்பதியரின் மருமகனும் நிகிலா அவர்களின் அன்புக் கணவரும் திருஷாயினி (மருந்தகவியல்துறை, யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம், இணைந்த சுகாதார விஞ்ஞான பீட முதலாம் வருட மாணவி) அவர்களின் ஆசை அப்பாவும் கிருஷ்ணானந்தன் (மாவட்ட சேவை உத்தியோகத்தர் தொழில்துறைத் திணைக்களம் மாவட்ட செயலகம் - வவுனியா), கிருஷ்ணகுமார் (மாவட்ட கலாசார உத்தியோகத்தர், மாவட்ட செயலகம் - யாழ்ப்பாணம்), கிருஷ்ணராஜன் (பிரதித் திட்டமிடல் பணிப்பாளர், பிரதிப் பிரதம செயலாளர் - திட்டமிடல் அலுவலகம், வடக்கு மாகாணம்), சதீஸ்கா (விரிவுரையாளர் - நோர்வே) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற ஜெகதீஸ்வரன் (ஜேர்மனி), சிறிதரன் (Konica & Sriram Jewellary), ரவீந்திரகுமார் (லண்டன்), ஜெயசீலன் (சாணுகா Jewellary), சிறிசக்திவேல் (Meenackshi Jewellary & Dotline Colour Lab) ஆகியோரின் அன்பு மைத்துனரும் விமலரதி, நித்தியகலா, விஜயகுமாரி, உஷாநந்தினி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.12.2025) வியாழக்கிழமை காலை 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் : குடும்பத்தினர்

(C-4661)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சவால்களை வென்று ஒன்றிணைந்து மீண்டெழுவோம்

## நத்தார் வாழ்த்துச் செய்தியில் ஜனாதிபதி



(கொழும்பு)

**யதார்த்தத்தின் வேதனையான உண்மையை எதிர்கொண்டு, சவால்களை வென்று ஒரு நாடாக ஒன்றிணைந்து மீண்டெழுவோம் என்று அனைவருக்கும் அழைப்பு விடுத்து, அமைதி, மகிழ்ச்சி, மனிதநேயம், இரக்கம் மற்றும் கருணை ஆகியவற்றால் நிறைந்த இனிய நத்தார் பண்டிகையாக அமைய வேண்டும் என்று ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தெரிவித்தார்.**


உலகம் முழுவதும் உள்ள கிறிஸ்தவர்கள் இயேசு கிறிஸ்து பிறந்த தினமான நத்தார் பண்டிகையை இன்று கோலாகலமாக கொண்டாடி வருகின்றனர்.

இலங்கையர்களாகிய நாம், ஒரு நாடாக, மிகவும் வேதனையான இயற்கைப் பேரழிவை எதிர்கொண்ட பிறகு உறுதியுடன் மீண்டு வரும் சந் தர்ப்பத்திலேயே இந்த நத்தார் பண்டிகையை கொண்டாடுகிறோம் என்பது அனைவரும் அறிந்த விடயம்.

அன்பு, அமைதி, மகிழ்ச்சி, பகிர்வு மற்றும் தியாகம் ஆகியவையே நத்தார் பண்டிகையின் உண்மையான அர்த்தங்கள் ஆகும். பாதிக்கப்பட்டவர்களுக்கு சகோதர உணர்வுடன் ஆதரவு வழங்குதல் மற்றும் மனிதகுலத்தின் விடுதலைக்கான அர்ப்பணிப்பு என்பன இவற்றில் முதன்மையான தாகும்.

இக்கட்டான காலங்களில் அயல் வீட்டாரை கைவிடாமல் சகோதரத்துவத்துடன் அரவணைக்கும் உன்னதமான மனிதப் பண்பையும், அசைக்க முடியாத உறுதியையும் கடந்த அனர்த்த நிலைமையில் இந்நாட்டு மக்கள் மீண்டும் மீண்டும் நிரூபித்துள்ளனர்.

அமைதி, நல்லிணக்கம், தியாகம் மற்றும் இரக்க குணம் கொண்ட ஒரு சமூகத்தை உருவாக்க அழைப்பு விடுக்கும் புனித நத்தாரின் அர்த்தத்தை உண்மையில் புரிந்து கொண்ட தனாலேயே, ஒருபோதும் பயணிக்க எதிர்பார்க்காத வீதிகளில் கூட தமது சகோதர மக்களுக்காக அத்தியாவசியப் பொருட்களை மக்கள் சுமந்து சென்றார்கள் என்று நான் நம்புகிறேன் என அவர் தெரிவித்தார். (நி)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம்
## ஆதனப் பெயர்மாற்றம்
### 137, நெல்லியான் வீதி, வட்டாரம் – 01

வலிகாமம் மேற்கு பிரதேச சபை சுழிபுரம் உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம் 01, நெல்லியான் வீதியிலுள்ள 137 ஆகி ஆதனம் எனது ஆதன வரிப்பதிவேட்டின் பிரகாரம் சின்னப்பு இராசையா என்றே காணப்படுகிறது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை உள்ளடக்கிய முழு ஆதனத்தில் ஒரு பகுதியினை சின்னப்பொடி வயிரு பெண் சின்னப்பிள்ளை ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு சு.சிற்றம்பலம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 1254/03.04.1906ம் இலக்க உறுதியால் சுந்தா கோவிந்தா கைம்பெண் ஆச்சிப்பிள்ளை ஆகியவரிடமிருந்து அவரது சீவிய உரித்திற்கமைவாக சீதனமாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

நரசிங்கம் இராமலிங்கம் கைம்பெண் மீனாட்சி ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு வே.நாகலிங்கம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 4005/02.07.1933ம் இலக்க உறுதியால் குறித்த சின்னப்பொடி வயிரு கைம்பெண் சின்னப்பிள்ளையும், கந்தா கோவிந்தா கைம்பெண் ஆச்சிப்பிள்ளையும் ஆகியவர்களிடமிருந்து குறித்த ஆதனத்தினை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

சின்னப்பு இராசையா ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு இ.கந்தையா முகதாவில் நிறைவேற்றப்பட்ட 7530/02.06.1935ம் இலக்க உறுதியால் குறித்த நரசிங்கம் இராமலிங்கம் கைம்பெண் மீனாட்சி ஆகியவரிடமிருந்து குறித்த ஆதனத்தினை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார். குறித்த சின்னப்பு இராசையாவின் மனைவி இராசையா பெண் மாரிமுத்து காலஞ்செல்ல, குறித்த ஆதனத்தில் அவருக்குரிய பங்கு முறையே அவரது கணவரான குறித்த சின்னப்பு இராசையா ஆகியவருக்கு தேடிய தேட்டமும், தாரப்பங்காகவும் அவரது வாரிசான இராசையா மகள் மகாலட்சுமி ஆகியவருக்கு மாதாவழி முதுசமாகவும் வந்தடைந்தது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை உள்ளடக்கிய முழு ஆதனத்தில் மற்றொரு பகுதியினை நரசிங்கம் இராமலிங்கம் பெண் மீனாட்சி ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு சு.சிற்றம்பலம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 1255/03.04.1906ம் இலக்க உறுதியால் குறித்த கந்தா கோவிந்தா கைம்பெண் ஆச்சிப்பிள்ளை ஆகியவரிடமிருந்து அவரது சீவிய உரித்திற்கமைவாய சீதனமாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

சின்னப்பு இராசையா பெண் மாரிமுத்து ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு க.சிதம்பரநாதன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 139/13.11.1931ம் இலக்க உறுதியால் குறித்த நரசிங்கம் இராமலிங்கம் கைம்பெண் மீனாட்சியும், கோவிந்தா கைம்பெண் ஆச்சிப்பிள்ளையும் ஆகியவர்களிடமிருந்து குறித்த ஆதனத்தினை சீதனமாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார். குறித்த இராசையா பெண் மாரிமுத்து காலஞ்செல்ல, குறித்த ஆதனமானது அவரது வாரிசான சின்னப்பு இராசையா மகள் மகாலட்சுமி ஆகியவருக்கு மாதாவழி முதுசமாக வந்தடைந்தது.

அதனடிப்படையில் மேற்படி முழு ஆதனத்திற்கும் சின்னப்பு இராசையாவும், சின்னப்பு இராசையா மகள் மகாலட்சுமியும் ஆகியவர்கள் சொந்தமும் உரித்துமுடையவராயிருந்தார்கள்.

சின்னப்பு இராசையா ஆகியவர் மேற்படி முழு ஆதனத்தில் குறித்த சின்னப்பு இராசையா மகள் மகாலட்சுமிக்குரிய பங்கினை பிரசித்த நொத்தாரிசு க.சேனாதிராசா முகதாவில் நிறைவேற்றப்பட்ட 5902/06.03.1966ம் இலக்க உறுதியால் குறித்த சின்னப்பு இராசையா மகள் மகாலட்சுமி ஆகியவரிடமிருந்து நன்கொடையாகப் பெற்று முழு ஆதனத்திற்கும் சொந்தமும் உரித்துமுடையவரானார். குறித்த சின்னப்பு இராசையா காலஞ்செல்ல குறித்த முழு ஆதனமும் அவரின் வாரிசான சின்னப்பு இராசையா மகள் மகாலட்சுமி ஆகியவருக்கு மீள முதுசமாக வந்தடைந்தது.

கனகசபை நாகேஸ்வரனும் பெண் யோகமலரும் ஆகியவர்கள் குறித்த முழு ஆதனத்தில் ஒரு பகுதியானது தங்களில் 02ம் பேரின் பெரிய தந்தையார் சின்னப்பு இராசையா பேரில் குறித்த சின்னப்பு இராசையாவின் மகள் மகாலட்சுமியால் குறித்த 5902ம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட நன்கொடை உறுதியாலும், குறித்த முழு ஆதனத்தில் மற்றொரு பகுதி குறித்த 7530ம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட அறுதியுறுதியாலும் குறித்த சின்னப்பு இராசையா ஆகியவருக்கு சொந்தமாக இருந்தது எனவும் அவர் காலஞ்செல்ல அவரது ஏகவாரிசான குறித்த இராசையா மகள் இராசலட்சுமிக்கு முதுசமாக வந்தடைந்தது எனவும், குறித்த. முன்னுரித்தாளர்களான சின்னப்பு இராசையா மகள் மகாலட்சுமியும், சின்னப்பு இராசையாவும், சின்னப்பு இராசையா பெண் மாரிமுத்துவும் அவர்களது காலத்தில் வேறு எவருக்கும் குறித்த ஆதனங்களைக் கையளித்திருக்கவில்லை என்பதோடு குறித்த ஆதனத்திற்கு உரிமை கோரும் வேறு வாரிசுகள் எவரையும் விட்டுச் செல்லவில்லை எனவும், ஆகையால் அவர்களின் பின்னுரித்தாளரும், அடுத்துறுபவருமான தங்களில் 02ம் பேராகிய தானே இற்றைக்கு 50 வருடங்களுக்கு மேலாக குறித்த ஆதனத்தில் தங்குதடையற்றதும், பிற இடையூறற்றுதுமான ஆட்சியிலும், குழப்பப்படாத சமாதானமான உடைமை கொண்டும் ஆட்சியிலிருந்து வருவதன் மூலம் குறித்த ஆதனம் தன்னை வந்தடைந்துள்ளதாக வெளிப்படுத்தி பிரசித்த நொந்தாரிசு பஞ்சலிங்கம் அம்பிகை முகதாவில் 103/25.02.2022ம் இலக்கத்தில் வெளிப்படுத்தல் உறுதியொன்றை நிறைவேற்றியிருந்தார்கள்.

நாகேஸ்வரன் அகிலன் ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு பஞ்சலிங்கம் அம்பிகை முகதாவில் நிறைவேற்றப்பட்ட 119/23.04.2022ம் இலக்க உறுதியால் குறித்த கனகசபை நாகேஸ்வரனும், நாகேஸ்வரன் பெண் யோகமலரும் ஆகியவர்களிடமிருந்து மேற்படி ஆதனத்தின் ஒரு பகுதியினை நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

குறித்த நாகேஸ்வரன் அகிலன் ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு பஞ்சலிங்கம் அம்பிகை முகதாவில் நிறைவேற்றப்பட்ட 120/23.04.2022ம் இலக்க உறுதியால் குறித்த கனகசபை நாகேஸ்வரனும் பெண் யோகமலரும் ஆகியவர்களிடமிருந்து மேற்படி ஆதனத்தின் மற்றைய பகுதியினையும் நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

ஆதனடிப்படையில் மேற்படி முழு ஆதனத்திற்கும் குறித்த நாகேஸ்வரன் அகிலன் ஆகியவரே தற்போது சொந்தமும் உரித்துமுடையவராயுள்ளார்.

குறித்த ஆதனத்தின் விபரம் வருமாறு:

பெயர்: "உலகவளை"

இறை: தொல்புரம்

விஸ்தீரணம்: மேற்படி இரண்டு ஆதனங்களும் அருகருகே அமையப் பெற்று தற்போது ஒரே ஆதனமாக ஆட்சி செய்யப்பட்டு வரப்படுகின்றது. இது தற்போது உத்தரவு பெற்ற நில அளவையாளர் C.விஸ்வநாதன் அவர்களால் 2025.06.07ம் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட 2226ம் இலக்க நில அளவைப்படத்தில் துண்டு 1 எனச் சுட்டப்பட்டுள்ளதன் படி நில.பர 11 குளி 03.00

எல்லைகள்: கிழக்கு - கதிரவேலு மகாதேவனின் ஆதனம், வடக்கு - நெல்லியான் றோட், மேற்கு - பாலகிருஷ்ணன் பெண் சரஸ்வதியின் ஆதனமும், வழக்கம்பரை அம்மன் கோவில் ஆதனமும், தெற்கு - பாதை

குறித்த நாகேஸ்வரன் அகிலன் ஆகியவர் ஆதனப் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்.

இவ் ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது நாகேஸ்வரன் அகிலன் ஆகியவருக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்

தவிசாளர்/செயலாளர்
25.12.2025 (6390) வலிகாமம் மேற்கு பிரதேசசபை

# ஒரே ஓவரில் 5 விக்கெட்டுகள்
# உலக சாதனை படைத்த இந்தோனேசிய வீரர்



சர்வதேச ரி- 20 கிரிக்கெட் வரலாற்றில் ஒரே ஓவரில் 5 விக்கெட்களை வீழத்திய முதலாவது வீரர் என்ற அரிய சாதனையை இந்தோனேசிய வீரர் கெடே பிரியந்தன படைத்துள்ளார்.

இந்தோனேசியா, கம்போடியா அணிகளுக்கு இடையிலான ரி-20 தொடர் நடைபெற்று வருகிறது. இரு அணிகளுக்கும் இடையேயான முதல் ரி-20 போட்டிபாலிநகரில்நடைபெற்றது. நாணயச்சுழற்சியில்வென்ற கம்போடியா பந்து வீச்சைத் தேர்வு செய்தது.

அதன்படி, முதலில் துடுப்பெடுத் தாடிய இந்தோனேசிய அணி 168 ஓட்டங்கள் எடுத்தது. 169 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் விளையாடிய கம்போடியா அணி 15 ஓவரில் 5 விக்கெட்டுக்கு 107 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

16 ஆவது ஓவரை கெடே பிரியந்தன வீசினார். அந்த ஓவரில் முதல் 3 பந்துகளில் 3 விக்கெட் வீழ்த்தி ஹாட் ரிக் எடுத்தார். 4 ஆவது பந்தில் விக்கெட் வீழ்த்தவில்லை. 5ஆவது மற்றும் 6ஆவது பந்தில் விக்கெட்டுகளை வீழ்த்தி இந்தோனேசியா அணியை வெற்றி பெற செய்தார்.

கெடே பிரியந்தன ஒருஓவரில் ஒரு ஓட்டம் கொடுத்து 5 விக்கெட் வீழ்த்தினார். இந்நிலையில், சர்வதேச கிரிக்கெட்டில் ஒரு ஓவரில் 5 விக்கெட் வீழ்த்திய முதல் வீரர் என்ற சாதனையை கெடே பிரியந்தன படைத்தார்.

ஏற்கனவே, நட்சத்திர பந்து வீச்சாளர்களான மலிங்கா, ரஷீத் கான் ஆகியோர் ஒரு ஓவரில் 4 விக்கெட் வீழ்த்தியிருந்த நிலையில், கெடே பிரியந்தன 5 விக்கெட் வீழ்த்தி அசத்தி யுள்ளார். (3)

# இலங்கையுடனான ரி-20 தொடர்
# மீண்டும் இந்தியா வெற்றி



இந்திய மற்றும் இலங்கை மகளிர் அணிகளுக்கிடையிலான இரண்டாவது ரி- 20 கிரிக்கெட் போட்டியில் இந்திய மகளிர் அணி 7 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

குறித்த போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய மகளிர் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபட தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை மகளிர் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுகளை இழந்து 128 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

துடுப்பாட்டத்தில் இலங்கை அணியின் சார்பில் ஹர்ஷிதா சமர விக்ரம 33 ஓட்டங்களை அதிகபட்சமாக பெற்றுக் கொடுத்தார்.

இந்தநிலையில் 129 ஓட்டங்கள் எனும் வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத் தாடிய இந்திய மகளிர் அணி 11.5 ஓவர்கள் நிறை வில் 3 விக்கெட்டுகளை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

துடுப்பாட்டத்தில் இந்திய அணியின் சார்பில் ஷெஃபாலி வர்மா 69 ஓட் டங்களை அதிகபட்சமாக பெற்றுக் கொடுத் தார். இதற்கமைய 5 போட்டிகள் கொண்ட ரி-20 கிரிக்கெட் தொட ரில் 2-0 என்ற அடிப்படையில் இந்திய அணி முன்னிலையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (3)

## புதியகல்வி ...

திட்டத்தின் கீழ், ஹெம்மாத்தகம பிரதேச வைத்தியசாலைக்கு 28 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள வைத்தியசாலை உபகரணங்களை வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்று (24) இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

மக்களினதும் பாடசாலை மாணவர்களினதும் மனநிலைகள் குறித்து நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

அவர்களினது அடிப்படை உரிமைகளை மீறக் கூடாது. பாடசாலைக் கட்டமைப்பை வலுப்படுத்துவதற்கு அரசாங்கத்திடம் சரியான திட்டமொன்று இல்லாமையால் பிள்ளைகளே பாதிப்பட்டுள்ளனர்.

அரசாங்கம் விரும்புவது போல் ஜனவரி முதல் புதிய சீர்திருத்தங்களை அமுல்படுத்துவது நடைமுறைக்கு சாத்தியமற்றது என்பதால், இது குறித்து சிந்தித்துப் பார்த்து நடவடிக்கை எடுக்குமாறு அரசாங்கத்திடம் கேட்டுக் கொள்கிறேன்.

இத்தருணத்தில் மக்கள் எந்தளவு உதவியற்றவர்களாகக் காணப்படுகின்றனர் என்பதை அரசாங்கம் புரிந்து கொள்ள வேண்டும் என்றார். (ம-7)

## 15 மாடுகள் ...

15 மாடுகள் கைப்பற்றப்பட்டன.

யாழ்.மாநகர சுகாதார குழுத் தலைவர் சாருஜன், மாநகர பிரதி முதல்வர் இமானுவேல் தயாளன், மாநகர சபை உறுப்பினர் சு.நிஷாந்தன், மயூரன் உள்ளிட்ட மாநகர சபை குழுவினரால் குறித்த கொல்கலம் நேற்றிரவு முற்றுகையிடப்பட்டது.

இன்று நத்தார் தினத்தை முன்னிட்டு அனுமதியற்ற முறையில் காதுபட்டி இன்றி குறித்த மாடுகள் கொண்டுவரப்பட்டு இறைச்சிக்காக வெட்டத் தயார் நிலையில் வைக்கப்பட்ட நிலையில் மாநகர சபை மேற்பார்வை உத்தியோகத்தருக்குக் கிடைத்த தகவலுக்கமைய குறித்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது குறித்த மாடுகள் வெட்டப்படுவது தடுக்கப்பட்டதுடன் உரிமையாளருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ம-7,33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாட்டு வேலை வாய்ப்பை நாடுபவர்களின் எண்ணிக்கையில் சரிவு

(கொழும்பு)

கடந்த காலங்களில் அரசியல்வாதிகளினால் முன்னெடுக்கப்பட்ட மோசடிகள் மற்றும் முறையற்ற நிர்வாகம் காரணமாக, வெளிநாட்டு வேலை வாய்ப்பை நாடுபவர்களின் எண்ணிக்கை பெருமளவு குறைந்துள்ளதாக இலங்கை உரிமம் பெற்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் சங்கம் தெரிவித்துள்ளது.

கடந்த காலங்களில் இடம் பெற்ற நிதி மோசடிகள் காரணமாக தொழிலாளர்களின் எதிர்காலம் கேள்விக் குறியாகியுள்ளதாகவும், இது வேலை தேடுபவர்களிடையே பெரும் சோர்வை ஏற்படுத்தியுள்ளதாகவும் சங்கத்தின் உறுப்பினர் முஹம்மது அசாம் தெரிவித்துள்ளார்.

இந்த வீழ்ச்சியின் காரணமாக மத்திய கிழக்கு நாடுகளுக்கு தொழிலாளர்களை அனுப்பும் நடவடிக்கை குறிப்பிடத்தக்களவு குறைவடைந்துள்ளது.

அரசாங்கத்துடன் இணைந்து வெளிநாட்டு வேலை வாய்ப்பு நடைமுறைகளை முறைப்படுத்துவதன் மூலம், அடுத்த ஆண்டில் தொழிலாளர் பணப்பரிமாற்றத்தை 10 பில்லியன் அமெரிக்க டொலராக உயர்த்த முடியும் என சங்கம் எதிர்பார்ப்பு வெளியிட்டுள்ளது. (நி)

# அவசர நிவாரண உதவிகளை வழங்க புதிய பதிவுத் திட்டம் ஆரம்பம்

(கொழும்பு)

டித்வா சூறாவளியால் பாதிக்கப்பட்ட பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு அவசர நிவாரண உதவிகளை வழங்குவதற்காக இலங்கை அரசாங்கம் ஒரு புதிய பதிவுத் திட்டத்தை தொடங்கியுள்ளது.

பாதிக்கப்பட்டவர்கள் தங்களின் விபரங்களை எதிர்வரும் ஜனவரி 6 ஆம் திகதிக்குள் அதிகாரப்பூர்வ இணையதளம் வழியாகச் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

18 வயதிற்குட்பட்ட சிறுவர்களுக்காக அவர்களின் பெற்றோர் அல்லது பாதுகாவலர்கள் விண்ணப்பிக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதில் பகிரப்படும் அனைத்துத் தகவல்களும் ரகசியமாகப் பாதுகாக்கப்படும் அதேவேளை, தவறான தகவல்களை அளிப்பது அரசாங்க உதவியைப் பெறுவதற்கான தகுதியை இரத்து செய்யும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மிகவும் பாதிப்புக்குள்ளானவர்களுக்கு உதவிகளை விரைவாகக் கொண்டு சேர்ப்பதே இந்த முயற்சியின் முக்கிய நோக்கமாகும்.

பாதிக்கப்பட்டவர்கள் எவ்வித தாமதமுமின்றி வழங்கப்பட்டுள்ள ஆங்கிலப் படிவத்தைப் பயன்படுத்திப் பதிவு செய்துகொள்ளுமாறு வலியுறுத்தப்படுகிறார்கள். (நி)

## வாடா மல்லிகையாக மணம் வீசும் வலம்புரி



பேனாமுனைப் பெரும் சமர்
பேசுபொருளான இவ்வுலகில்
வாழாதிருக்க முடியாதென்று
சமூகத்திருத்தத்தின் மீது
தீராக் காதல்கொண்டு
எழுத்துலகில் போராய்த் தொண்டு செய்யும்
வலம்புரி! வாழிய வாழியவே!

பிறப்பாலன்றி பொறுப்பால் ஒன்றிணைந்த
விஜயசுந்தரம் - திருமால் இரட்டையர்களின்
கைவண்ணமும்
மன எண்ணமும் ஒன்றிணைய
பாரதி பாணியில்
ஓர் சமூகப்புரட்சி...
கத்தியின்றி...
ரத்தமின்றி...
சத்தமின்றி... நடக்கிறது

போர் மேகம் சூழ்ந்து
பொழிந்தழித்த மண்ணில்
வேர் அறுந்த மரமாய் மக்கள் வேறுபட்டுக் கிடக்க
தேர் விரைந்த வீதி எங்கும் சிதைந்து போயிருக்க - அதனை
தார் ஊற்றி செப்பனிடும் பணியாய் வலம்புரி

இன்றுபோல்
நின்று நீ
என்றும் வாழ்வாய்!
வலம்புரிச்சங்காய்,
வெற்றி நாதம் ஊதுவாய்!
தினம் தினம் வளர்ந்து
பார் எல்லாம் சேருவாய்
உன் வெற்றிநிலை கண்டு
நண்பர்கள் நாமும் சேர்ந்திருப்போம்!

**தர்மலிங்கம் ஸ்ரீகாந்தன்**
பிரதி அதிபர், வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயம்.

# பேரனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு LOLC யின் நிவாரணப் பணி



## விளம்பர விவரணம்

இலங்கையும் அதன் மக்களும் கஷ்டமான தருணங்களை எதிர்கொள்ளும் போதெல்லாம் முன்னேறிச் சென்று, LOLC திவி சவிய நீண்ட காலமாக இரக்கம் மற்றும் ஒற்றுமையின் அடையாளமாக நிற்கிறது. இன்று, இலங்கையின் வரலாற்றில் மிகக் கடுமையான இயற்கை பேரழிவுகளில் ஒன்றான டித்வா சூறாவளியின் பேரழிவு தாக்கத்திலிருந்து மீள தேசம் போராடி வரும் வேளையில், திவி சவிய "நீங்களும் நாமும் நம் நாடும்" (ஒபய் மமய் அபே ரடய்) என்ற பாடலைத் தொடங்குவதன் மூலம் அதன் உறுதிப்பாட்டைப் புதுப்பிக்கிறது.

ஆயிரக்கணக்கான குடும்பங்களைப் பாதித்து, பல பிராந்தியங்களில் கல்வியை சீர்குலைத்துள்ள பரவலான வெள்ளம் மற்றும் நிலச்சரிவுகளிலிருந்து எழும் உடனடி மற்றும் நீண்டகாலத் தேவைகள் இரண்டையும் பற்றிய ஆழமான புரிதலை திவி சவிய பிரதிபலிக்கிறது. ரூ.400 மில்லியனுக்கும் அதிகமான முதலீட்டுடன், LOLC திவி சவிய "நீங்களும் நாமும் நம் நாடும்", நிவாரணத்தில் மட்டுமல்ல, கண்ணியம், ஸ்திரத்தன்மை மற்றும் நம்பிக்கையை மீட்டெடுப்பதிலும் கவனம் செலுத்தும் இலங்கையில் மிகப்பெரிய மற்றும் மிகவும் விரிவான நிறுவன தலைமையிலான முயற்சிகளில் ஒன்றாகும். தேசிய துன்ப காலங்களில் தீர்க்கமாக பதிலளிப்பதற்கான இந்த அர்ப்பணிப்பு திவி சவியவின் முந்தைய தலையீடுகளின் மரபில் வேரூன்றியுள்ளது.

திவி சவிய முதன்முதலில் "ஜீவிதய தினன்னட" (வாழ்க்கையை வெல்ல) மூலம் உயிர்ப்பிக்கப்பட்டது. இது உலகளாவிய தொற்றுநோயால் பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கு 100 நாட்களுக்கும் மேலாக உலர் உணவுப் பொருட்களை வழங்கியது. மொத்தம் ரூ.500 மில்லியன் முதலீட்டில் 125,000 குடும்பங்களைச் சென்றடைந்தது. அதைத் தொடர்ந்து, அதிகரித்து வரும் பாடசாலைகள் இடைநிற்றல் விகிதங்கள் காரணமாக மூடப்பட்ட பொருளாதார நெருக்கடியின் மத்தியில் தொடங்கப்பட்ட "தெயே தருவங்கே அனாகதய வெனுவென்" (நாட்டின் குழந்தைகளின் எதிர்காலத்திற்காக) திட்டம். இது 4,090 பாடசாலைகளில் 296,000 மாணவர்களுக்கு ஆதரவளித்தது. இது இலங்கையின் மொத்த பாடசாலை மக்கள் தொகையில் கிட்டத்தட்ட 40 சதவீதத்தை உள்ளடக்கியது. ரூ.2.5 பில்லியன் முதலீட்டில்.

முதல் கட்டம், இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு உணவுப்பொருட்கள் மற்றும் அத்தியாவசிய உணவு அல்லாத பொருட்களை உள்ளடக்கிய சிறப்பாக வடிவமைக்கப்பட்ட குடும்ப உலர் உணவு நிவாரண பொதிகளை விநியோகிப்பதன் மூலம் உடனடி நிவாரணத்தில் கவனம் செலுத்துகிறது. இரண்டாம் கட்டம், நாடு முழுவதும் 200 பாடசாலைகளில் கல்வி உட்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கான ஒரு பெரிய புதுப்பித்தல் இயக்கத்தின் மூலம் மீட்சியை முன்னேற்றுகிறது. மூன்றாம் கட்டம், முற்றிலும் அழிக்கப்பட்ட பல பாடசாலைகளின் முழுமையான புனரமைப்பு, முழுமையாக செயற்படும் கற்றல் சூழல்களை உருவாக்குதல் போன்ற மிக முக்கியமான தேவையை நிவர்த்தி செய்கிறது.

LOLC திவி சவிய 'நீங்களும் நாமும் நம் நாடும்' திட்டத்தின் முதல் கட்டம் 2025 டிசெம்பர் மாதம் 22 ஆம் திகதி LOLC தலைமை அலுவலகத்தில் வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது. முதல் குடும்ப உலர் உணவு நிவாரண பொதியை LOLC ஹோல்டிங்ஸ் பிஎல்சியின் குழும முகாமைத்துவ பணிப்பாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி கபில ஜெயவர்தன அவர்கள் எம்டிவி சேனல்கள் மற்றும் பேரிடர் மேலாண்மை மையத்தின் பிரதிநிதிகளிடம் அதிகாரப்பூர்வமாக ஒப்படைத்தார்.

# DEWMAS மூலம் குவியும் வேலை வாய்ப்புகள்

தற்போதைய காலத்தில் வேலையில்லா பிரச்சினை என்பது மிகப் பெரிய பிரச்சினையாக இருக்கிறது. ஆனால் தற்போது பல தனியார் நிறுவனங்களில் பொருத்தமான வேலையாட்கள் உடனடியாக தேவையென்பது அதைவிட பெரிய பிரச்சினையாக உருவெடுத்து வருகிறது. வேலைவாய்ப்புகளை எதிர்பார்ப்பவர்களில் ஒரு பகுதியினர் அரச வேலைவாய்ப்புகள், வங்கி வேலைவாய்ப்புகள் தான் தேவையென நீண்ட நாட்களாக காத்திருக்கிறார்கள். தனியார் வேலை வாய்ப்புகளை எதிர்பார்ப்பவர்களில் ஒரு பகுதியினர் Online Job, Driver ஆகிய வேலைவாய்ப்புகளை மட்டும் எதிர்பார்க்கின்றனர். இதேபோல் இன்னொரு பகுதி இளைஞர் யுவதிகள் அனுபவம் அல்லது உயர் கல்வித்தகைமை இல்லாமல் A/L முடித்தவுடன் ஆரம்பத்திலேயே மிக அதிகளவு சம்பளம் எதிர்பார்க்கிறார்கள். சிலர் வேலைவாய்ப்பு கிடைத்தாலும் முழு நேரமும் தொலைபேசியுடன் நேரத்தை செலவழித்து கிடைத்த வேலைவாய்ப்பை இழக்கின்றனர்.

இதனால் வேலையில்லாப் பிரச்சினை, வேலைக்கு ஆட்கள் இல்லாத பிரச்சினைகள் அதிகரித்துக் கொண்டு செல்கிறது. எனவே எதிர்பார்ப்புகள் மற்றும் நிபந்தனைகளை மாற்றியமைக்கும் போது இவ்வாறான பிரச்சினைகள் ஓரளவு குறைவடையும். வேலை வாய்ப்பு தேடுவோரும், வேலையாட்களை எதிர்பார்க்கும் நிறுவனங்களும் ஓரிடத்தில் ஒரேநேரத்தில் தொடர்ந்து சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தால் இந்த பிரச்சினைகள் பெருமளவு குறைவடையும் இதற்கேற்ற ஒழுங்குகளை DEWMAS நிறுவனம் செய்து வருகின்றது.

2025 December 19 ஆம், 20 ஆம் திகதிகளில் யாழ்ப்பாண கலாச்சார மண்டபத்தில் நடைபெறும் கல்விக் கண்காட்சியில் பிரமாண்ட வேலை வாய்ப்பு முகாம் (Jop fair) ஒன்றையும் ஒழுங்கு செய்தது. ஆனால் இது தவிர்க்க முடியாத காரணத்தினால் அடுத்த மாதத்திற்கு பிற்போடப்பட்டுள்ளது.

மேலும் வாடிக்கையான நிறுவனங்களிற்கு DEWMAS நிறுவனம் December 31 வரை 25% முதல் 60% வரை பிரமாண்ட கட்டணக்கழிவுகளை வழங்குகிறது.

வேலைவாய்ப்பு முகாம்களுக்கு வரமுடியாதவர்கள் dewmasweb.com மூலம் வேறு வேலைவாய்ப்புகளை பார்வையிடலாம். இதில் யாழ்.மாவட்ட வேலைவாய்ப்புகள் மட்டுமன்றி ஏனைய மாவட்ட வேலைவாய்ப்புகளையும் பார்வையிடலாம். இதில் Dewmas நிறுவன வேலை வாய்ப்பு தகவல்களை உடனுக்குடன் அறிய Whatsapp Groups Links, Tiktok Links களும் இணைக்கப்பட்டுள்ளது. இவற்றில் இணைவதன் மூலமும் புதிய வேலைவாய்ப்பு தகவல்களை அறியலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வடக்கு மாகாண மகளிர் விவகாரம் மற்றும் வர்த்தக வாணிப அமைச்சினால் மாவட்ட ரீதியாக சந்தைப்படுத்தல் பயிற்சி வழங்கப்பட்ட பெண் தொழில் முயற்சியாளர்களுக்கு சந்தைப்படுத்தல் வாய்ப்புகளை ஏற்படுத்துவதற்காகவும் கைத்தொழில் முயற்சிகளை ஊக்குவிக்கும் வகையிலும் கண்காட்சியுடன் கூடிய விற்பனை நிகழ்வு மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு தின நிகழ்வு மற்றும் பயிற்சி பெற்ற தொழில் முயற்சியாளர்களுக்கான சான்றிதழ் வழங்கும் விழா நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணத்திலுள்ள யாழ் பிரதம தபால் அலுவலக வளாக முற்றத்தில் இடம்பெற்றது.

அமைச்சின் செயலாளர் மு.நந்தகோபாலன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் வடமாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன், வடக்கு மாகாண பிரதம செயலாளர் திருமதி தனுஜா முருகேசன் மற்றும் யாழ் மாநகரசபை உறுப்பினரும் முன்னாள் சிரேஷ்ட விரிவுரையாளருமான சுந்தரமூர்த்தி கபிலன் தொழில்துறை திணைக்கள பணிப்பாளர் துஷியா கஜமுகன் மற்றும் யாழ் பல்கலைக்கழக முகாமைத்துவபீட துறைத்தலைவர் சிவானி சண்முகதாஸ் ஆகியோர் கலந்து சிறப்பித்ததுடன் சான்றிதழ்களையும் வழங்கிவைத்தனர்.

## மக்கள் கலை இலக்கியப் பேரவையின் 31 நூல்களின் அறிமுக அரங்கு

(யாழ்ப்பாணம்)

மக்கள் கலை இலக்கியப் பேரவையின் ஏற்பாட்டில் "புத்தகப் பண்பாட்டுப் பரணி" என்ற தலைப்பில் 2025 ஆம் ஆண்டு ஐப்பசி வாசிப்பு மாதத்தையொட்டி ஜீவநதி வெளியீடுகளாக நாளாந்தம் வெளிவந்த 31 நூல்களின் அறிமுக அரங்கு எதிர்வரும் 27.12. 2025 சனிக்கிழமை காலை 10 மணியளவில் இல. 68, நீதிமன்ற வீதி, மல்லாகம் என்ற முகவரியில் அமைந்துள்ள மக்கள் கலை இலக்கியப் பேரவைப் பணிமனையில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வானது மக்கள் கலை இலக்கியப் பேரவையின் தலைவர் த. ஸ்ரீபிரகாஸ் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் இலக்கிய ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு மக்கள் கலை இலக்கியப் பேரவையினர் அழைப்பு விடுத்துள்ளனர். (8)

## வைகுந்த ஏகாதசிப் பெருவிழா

(யாழ்ப்பாணம்)

வட்டக்கச்சி ஸ்ரீ ரங்கநாதப் பெருமாள் ஆலய வைகுந்த ஏகாதசிப் பெருவிழா நிகழ்வானது எதிர்வரும் 30 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

காலை 7 மணிக்கு ஸ்ரீமத் பகவத்கீதை முற்றோதலுடன் ஆரம்பமாகி தொடர்ந்து மதிய பூசை, திருப்பாவை முற்றோதல் மற்றும் விசேட பூசை வழிபாடுகள் எனப் பகல் நிகழ்வுகளும் இரவு 8 மணிக்கு கலை நிகழ்வுகளுடன் ஆரம்பமாகி தொடர்ந்து ஸ்ரீ ரங்கநாதப் பெருமாளுக்கு சிறப்பு அபிஷேகம், வைகுந்த வாசல் திறப்பு, இறந்தவர்களுக்கான மோட்ச அர்ச்சனை, திருப்பாவை உற்சவம் மற்றும் ஏகா தசி விரத உணவு வழங்குதல் என இரவு நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன என ஆலய பரிபாலன சபையும் உபயகாரர்களும் அறிவித்துள்ளனர். (3)

## கண்ணீரைத் துடைத்து கரம் கோர்ப்போம் சூழல் காத்து எளிமையாக கொண்டாடுவோம்

### கிறிஸ்மஸ் வாழ்த்துச் செய்தியில் ஆளுநர் நா. வேதநாயகன்

(யாழ்ப்பாணம்)

கிறிஸ்மஸ் தினத்தில் பட்டாசுகள் வெடிப்பதைத் தவிர்த்து அமைதியாகவும் சூழலுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையிலும் பண்டிகையைக் கொண்டாடுவோம் என வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு அனுப்பிவைத்த கிறிஸ்மஸ் வாழ்த்துச் செய்தியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். மேலும் தெரிவிக்கையில்,

வழக்கமாக கிறிஸ்மஸ் என்றாலே குதூகலமும், கொண்டாட்டமும் தான் நம் நினைவுக்கு வரும். ஆனால், இம்முறை எமது நாடும், எமது மாகாணமும் பெரும் சோகத்தைச் சுமந்து நிற்கிறது. அண்மையில் நம்மைத் தாக்கிய "டித்வா" புயல், நம் மண்ணில் ஏற்படுத்திய வடுக்கள் இன்னும் ஆறவில்லை. அந்தப் பேரிடரில் தங்கள் உயிர்களையும், உறவுகளையும், வாழ்நாள் சேமிப்பான உடைமைகளையும் இழந்து தவிக்கும் நம் சொந்தங்களின் கண்ணீரை கவனிக்காது விட முடியாது.

இயேசு பிரான் ஒரு எளிய குடிலில் பிறந்தவர். ஏழைகளின் துயரைத் துடைக்கவே அவர் அவதரித்தார். எனவே, இந்த ஆண்டு கிறிஸ்மஸ் பண்டிகையை ஆடம்பரமாகவும், வெகுவிமரிசையாகவும் கொண்டாடுவதைத் தவிர்த்துவிடுமாறு உங்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன்.

விழாக்களுக்கான பணத்தை மிச்சப்படுத்தி, புயலால் பாதிக்கப்பட்டு நிர்க்கதியாய் நிற்கும் நம் சக உறவுகளுக்கு ஒருவேளை உணவாகவோ, உடையாகவோ அல்லது அவர்கள் வாழ்வை மீட்டெடுக்கும் உதவியாகவோ வழங்குவதே, நாம் இறைவனுக்குச் செய்யும் உண்மையான தொண்டாக அமையும்.

அதேபோல, மற்றுமொரு முக்கியமான விடயத்தையும் உங்கள் கவனத்துக்குக் கொண்டு வருகிறேன். தற்போது வடக்கு மாகாணத்தில் காற்றின் மாசின் தரம் வழமையை விடச் சற்று அதிகமாகவும், ஆபத்தான நிலையிலும் உள்ளதாகத் தரவுகள் கூறுகின்றன. எனவே இந்த கிறிஸ்மஸ் தினத்தில் பட்டாசு வெடிப்பதை தவிர்த்து விடுங்கள்.



புயல் காற்றால் சாய்ந்த மரங்களை விட, நம் நம்பிக்கை வேர்கள் ஆழமானவை. இருள் சூழ்ந்த இந்த நேரத்தில், கிறிஸ்மஸ் ஒளி நம் அனைவரின் வாழ்விலும் நம்பிக்கையையும், ஆறுதலையும் தரட்டும். சாதி, மத பேதங்களைக் கடந்து, ஒரு தாய்ப் பிள்ளைகளாய் ஒன்றிணைந்து, பாதிக்கப்பட்டவர்களை அரவணைத்து இக் கட்டான சூழலை வெல்வோம். அனைவருக்கும் அமைதி தவழும் கிறிஸ்மஸ் வாழ்த்துக்கள் என அவர் தெரிவித்தார். (8)

## கரைச்சி பிரதேச செயலகத்தின் நடமாடும் சேவை

(தரமபுரம்)

CLEAN SRI LANKA வேலைத்திட்டத்தின் கீழ் கரைச்சி பிரதேச செயலகத்தின் நடமாடும் சேவை நேற்று ஸ்கந்தபுரம் இலக்கம் 01 அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் நடைபெற்றது.

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலாளர் த.முகுந்தன் தலைமையில் நடைபெற்ற குறித்த நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் சு.முரளிதரன் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு நிகழ்வினை ஆரம்பித்து வைத்தார்.

அத்துடன் CLEAN SRI LANKA வேலைத் திட்டத்தின் பிரதேச இணைப்பாளர், கரைச்சி பிரதேச சபையின் உறுப்பினர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டதுடன் பல்வேறு வகையான நலத்திட்ட உதவிகளும் பொதுமக்களுக்கு வழங்கிவைக்கப்பட்டன. (8-316)



## யாழ். ஊடக அமையத்தின் ஊடகவியலாளர்கள் கௌரவிப்பும் ஆண்டுவிழா நிகழ்வும்

(யாழ்ப்பாணம்)

யாழ். ஊடக அமையத்தின் ஏற்பாட்டில் ஊடகவியலாளர்கள் கௌரவிப்பும் ஊடக அமையத்தின் 15 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் எதிர்வரும் 28 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை மாலை 5.30 மணியளவில் பலாலி வீதி, கோண்டாவில் ராஜேஸ்வரி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக மருத்துவப் பீட முன்னாள் பீடாதிபதி சிரேஷ்ட வைத்திய நிபுணர் பேராசிரியர் சு.ரவிராஜ் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக வடமாகாணஅவைத் தலைவர் சீ.வீ.கே. சிவஞானம், யாழ்.பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி பேராசிரியர் எஸ். ரகுராம், முன்னாள் சட்ட வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி சி.சிவரூபன், சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விசேட சுற்றிவளைப்பில் 901 பேர் கைது

(கொழும்பு)

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் நாடளாவிய ரீதியில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மேற்கொள்ளப்பட்ட "முழு நாடுமே ஒன்றாக" என்ற தேசிய செயற்பாட்டின் போதைப்பொருள் சுற்றிவளைப்பின் போது 901 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்தப் போதைப்பொருள் சுற்றிவளைப்பின் போது 952 சோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்டவர்களில் 8 பேர் புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பி வைக்க பரிந்துரைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (நி)

# தையிட்டியில் பொலிஸாரின் அராஜகம் பருத்தித்துறை நகர சபை கண்டனம்

(கரணவாய்)

சட்டவிரோத தையிட்டி விகாரைக்கு எதிரான ஜனநாயக வழிமுறை போராட்டத்தின் போது இலங்கை பொலிஸார் மேற்கொண்ட அராஜகமான செயற்பாட்டிற்கு பருத்தித்துறை நகரசபை வன்மையான கண்டனத்தை தெரிவித்துள்ளது.

பருத்தித்துறை நகரசபையின் விசேட அமர்வு நேற்று புதன்கிழமை காலை நகர சபை தலைவர் வின்சென் டீ போல் டக்ளஸ் போல் தலைமையில் இடம்பெற்றது.

மாதாந்த மற்றும் 2025 ஆம் ஆண்டுக்கான இறுதி சபை அமர்வாக இடம்பெற்ற இவ்விசேட அமர்வின் போது நகரசபை செயற்பாடுகள், திட்டங்கள் தொடர்பில் ஆராயப்பட்டிருந்தது.

இதன்போது கடந்த 21 ஆம் திகதி தையிட்டி சம்பவம் தொடர்பில் நகரசபை கண்டனத்தை பதிவு செய்வது தொடர்பில் நகர சபைத் தலைவர் முன்வைத்த கோரிக்கை சபையில் உள்ளவர்களது எதிர்ப்பின்றி ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இந் நிலையில் ஜனநாயக முறையில் மேற்கொள்ளப்பட்ட குறித்த போராட்டத்தில் பங்கேற்றவர்களை பொலிஸார் கைது செய்த விதம் அடக்குமுறையின் வெளிப் பாடாகும் என தெரிவித்து பொலிஸாரின் இவ் அராஜகமான செயற்பாட்டிற்கு பருத்தித்துறை நகரசபை தனது வன்மையான கண்டனத்தைப் பதிவு செய்தது. (8-60-104)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## 40 வது பொதுப்பட்டமளிப்பு வைபவம் -2026
## பேராசிரியர் அழகையா துரைராசா தங்கப்பதக்கம்

**பேராசிரியர் அழகையா துரைராசா** தங்கப்பதக்கத்தினை வழங்கும் பொருட்டு கல்வியாண்டுகள் 2021/2022 மற்றும் 2022/2023, இல் பட்டம் பெற்று முதலாம் வகுப்பில் அல்லது இரண்டாம் வகுப்பு மேற்பிரிவில் சித்தியெய்தி, எதிர்வரும் 40 வது பொதுப் பட்டமளிப்பு வைபவத்தில் பட்டம் அளிக்கப்படவிருக்கும் மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. மேலும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னைய வவுனியா வளாகத்தின் பிரயோக விஞ்ஞான பீடம், வியாபாரக் கற்கைகள் பீடம் மற்றும் தொழில்நுட்பக் கற்கைகள் பீடத்தைச் சேர்ந்த மேற்படி கல்வியாண்டுகளில் தமது கற்கைநெறிகளைப் பூர்த்தி செய்த பட்டதாரிகளும் இத் தங்கப்பதக்கத்திற்காக விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கமுடியும்.

❖ **விண்ணப்பப்படிவங்களை கீழ்க்காணும் ஒரு முகவரியிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.**

1. சிரேஸ்ட உதவிப்பதிவாளர், கல்வி விவகாரங்கள் மற்றும் வெளியீட்டுக் கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
2. பிரதிப் பதிவாளர், பரீட்சைகள் மற்றும் மாணவர் சேவைகள் கிளை, வவுனியாப் பல்கலைக்கழகம், வவுனியா
3. பல்கலைக்கழக இணையத்தளம்: www.jfn.ac.lk

❖ **விருதுகள்:-**

- பல்கலைக்கழக மட்டத்தில் சகலதுறைகளிலும் சிறப்பாக செயற்பட்டமைக்காக ஒரு பதக்கம்.
- பீட மட்டத்தில் சகல துறைகளிலும் சிறப்பாகச் செயற்பட்டமைக்காக ஒவ்வொரு பீடத்திற்கும் ஒவ்வொரு பதக்கம்.

❖ **விண்ணப்பப் படிவங்களை சமர்ப்பித்தல்**

பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் யாவும், ஏனைய சான்றிதழ்களுடன் **"சிரேஸ்ட உதவிப்பதிவாளர், கல்வி விவகாரங்கள் மற்றும் வெளியீட்டுக்கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்"** என்னும் முகவரிக்கு 12.01.2026 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பக் கடித உறையின் இடது பக்க மேல்மூலையில் **"பேராசிரியர் அழகையா துரைராசா தங்கப் பதக்கத்திற்கான விண்ணப்பப் படிவம்"** எனக் குறிப்பிடவும்.

❖ **முடிவுத் திகதி : 12.01.2026 (திங்கட்கிழமை)**

❖ **முக்கிய குறிப்பு :**

ஏற்கனவே 2025 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 19 ஆம், 20 ஆம், 21 ஆம் மற்றும் 22 ஆம் திகதிகளில் நடைபெற்ற 39ஆவது பட்டமளிப்பு விழாவின் போது விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தவர்கள் மீண்டும் விண்ணப்பிக்கத் தேவை இல்லை.

சரியான, பொருத்தமான தகவல்களை உள்ளடக்காதவையும், தெளிவற்றவையும், பூரணப்படுத்தப்படாதவையும் மற்றும் முடிவுத்திகதிக்குப் பின்னர் கிடைக்கப் பெறுபவையுமான விண்ணப்பங்கள் யாவும் கருத்திற் கொள்ளப்படமாட்டா.

ஏற்கனவே 19 ஆம், 20 ஆம் மற்றும் 21 ஆம் திகதி ஆடி மாதம் 2023 இல் நடைபெற்ற 37 வது பட்டமளிப்பு விழாவின் போது விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தவர்கள் மீண்டும் விண்ணப்பிக்கத் தேவை இல்லை.

பதிவாளர்


# வடமராட்சி ஊடக அமையத்தினால் நிவாரணப் பொருட்கள் வழங்கல்

(கரணவாய்)

திருகோணமலை, மூதூர் - பள்ளிக்குடியிருப்பு கிராமத்தில் டித்வா புயலினால் கடுமையாக பாதிக்கப்பட்ட கற்பவதிகளுக்கான சத்துணவுப் பொருட்கள் அடங்கிய நிவாரணப் பொதிகள், யாழ் வடமராட்சி ஊடக இல்லத்தின் ஏற்பாட்டில் புலம்பெயர் வாழ் ஈழத்தமிழ் உறவுகளின் நிதிப்பங்களிப்புடன் வழங்கி வைக்கப்பட்டன.

டித்வா புயல் காரணமாக ஏற்பட்டிருந்த சீரற்ற காலநிலையினால் மாவிலாறுகுளக்கட்டு உடைப்பெடுத்து ஏற்பட்ட வெள்ளத்தினால் திருகோணமலை - மூதூர் , பள்ளிக்குடியிருப்பு கிராமம் மிகக் கடுமையான பாதிப்பை சந்தித்திருந்தது.

இந்நிலையில், பள்ளிக்குடியிருப்பில் செயற்பட்டு வரும் VK கல்வி நிலையத்தை சேர்ந்த சுகதாஸினால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக அக்கிராமத்தில் வாழும் 19 கற்பவதிகளுக்குத் தேவையான சத்துணவுப் பொருட்கள் கடந்த 22 ஆம் திகதி யாழ் வடமராட்சி ஊடக இல்லத்தின் சார்பில் அதன் முக்கிய செயற்பாட்டாளரும் மூத்த ஊடகவியலாளருமான மு.மதிவாணன் குறித்த உதவிப்பொருட்களை நேரில் சென்று வழங்கி வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (8-60)


## அண்ணாமலையான் ஸ்ரீ ராகவேந்திரர் திருமண மண்டபம்
## ASR WEDDING HALL

முகூர்த்த நாட்களுக்கான பதிவுகள்

எமது வாடிக்கையாளர்களுக்கும், அன்பர்களுக்கும் கிறிஸ்மஸ் மற்றும் புதுவருட நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

**அப்புக்குட்டி அண்ணை என்ன? வேகமாக நடந்து போறீர்? ஏட தம்பி சுப்பற்றை மகளுக்கு அண்ணாமலையான் கல்யாண மண்டபத்திலே கல்யாணம், எட தம்பி சாப்பாடு எப்படி? அட தம்பி சுப்பர் எட சுப்பர்.**

பிள்ளைகளின் திருமண வைபவம், பூப்புனித நீராட்டுவிழா, கிறிஸ்தவ பதிவு திருமணங்கள், தென்னிந்திய திரைப்படங்களை படமாக்க உகந்த மண்டபம். நிகழ்ச்சிகளை செய்ய விரும்புவர்கள் பதிவுகளை மேற்கொள்ளலாம்.

திங்கள் தொடக்கம் வெள்ளி வரை காலை 9 மணி முதல் மாலை 4.30 மணிவரை மண்டபத்தை பார்வையிடலாம்.

ஞாயிறு விடுமுறை

(6139)

**இல. 542, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.**
**தொலைபேசி எண்:- 076 744 6064, 021 222 1355**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## வியக்க வைக்கும் புதுமை

# பனியால் சூழப்பட்ட சவுதி அரேபிய பாலைவன நிலப்பரப்புக்கள்!



(ரியாத்)

கடுமையான வெப்பம் மற்றும் பரந்த பாலைவன நிலப்பரப்புகளுக்கு பெயர் பெற்ற நாடான சவுதி அரேபியா அசாதாரண குளிர்கால அத்தியாயத்தை அனுபவித்து வருகின்றது.

பனிப்பொழிவு, கன மழை மற்றும் கடுமையாக வீழ்ச்சியடைந்த வெப்பநிலை நாட்டின் பெரும்பகுதிகளை தற்சமயம் ஆக்கிரமித்து உள்ளது.

இது குடியிருப்பாளர்களை ஆச்சரியத்தில் ஆழ்த்திய வேளையில் பாதுகாப்பு ஆலோசனைகளைத் தூண்டுவதற்கும் வழிவகுத்தது.

பனிப்பொழிவானது சவுதி அரேபியாவின் தபூக் மாகாணத்தில் உள்ள மலைத்தொடர்களின் தோற்றத்தை வியத்தகு முறையில் மாற்றியுள்ளது.

குறிப்பாக, ஜெபல் அல் - லாஸில் உள்ள ட்ரோஜெனா உட்பட, சுமார் 2,600 மீற்றர் உயரம் கொண்ட மலைப் பகுதிகள் பனியால் மூடப் பட்டிருந்தன.

ஹெயில் நகரைச் சுற்றியுள்ள பகுதிகள் உட்பட ஹெயில் பிராந்தியத்தின் சில பகுதிகளிலும் பனிப்பொழிவு ஏற்பட்டது. இது மத்திய கிழக்கு நாட்டில் அரிதான நிகழ்வு.

அதிகாலை நேரங்களில் சில இடங்களில் வெப்பநிலை 0 டிகிரி செல்சியஸ°க்குக் கீழே குறைந்தது. இதனால் உயர்ந்த நிலங்களில் பனி குவிவதற்கு சாதகமான சூழ்நிலைகள் உருவாக்கின.

குளிர் காற்றுடன் பல பகுதிகளில் பரவலான மழைப்பொழிவு பதிவானது.

தேசிய வானிலை ஆய்வு நிலையத்தின் தகவலின்படி, ரியாத்தின் வடக்கே உள்ள அல்-மஜ்மா மற்றும் அல் - காட் ஆகிய இடங்களிலும் பனிப்பொழிவு காணப்பட்டது. அங்கு திறந்தவெளி பகுதிகளிலும் உயரமான நிலப்பரப்பிலும் பனி படிந்துள்ளது.


இது சவுதி அரேபியாவின் காலநிலை வரலாற்றில் ஒரு அரிய மற்றும் மறக்கமுடியாத தருணத்தைக் குறிக்கிறது.

இதேவேளை, ஐக்கிய அரபு எமிரேட்ஸில் எதிர்பாராத குளிர்கால மழை, தெற்காசியாவில் வரலாறு காணாத வெப்ப அலைகள், பொதுவாக வறண்ட மத்திய கிழக்குப் பகுதிகளில் ஏற்பட்ட திடீர் வெள்ளம் மற்றும் ஐரோப்பா மற்றும் வட ஆபிரிக்காவின் சில பகுதிகளில் ஏற்பட்ட அசாதாரண பனிப்பொழிவு நிகழ்வுகள், காலநிலை மாற்றத்தால் உலகம் முழுவதும் வானிலை நிலைமைகள் அடையாளம் காணமுடியாததாக மாறி வருகிறது என்பதைக் காட்டுகின்றன. (3)



# கிறிஸ்மஸ் தினத்தன்று

# 'போப்' இன் கோரிக்கை



(ரோம்) ----------

**கிறிஸ்மஸ் தின நிறுத்தம் செய்யு கோரிக்கையை ந கரித்திருப்பது வே பதாக போப் 14 தெரிவித்துள்ளார்.**


கிழக்கு ஐரோப்பிய நாடான உக்ரைனுக்கும், ரஷ்யாவுக்கும் இடையே கடந்த 2022 ஆம் ஆண்டு, பெப்ரவரி முதல் போர் நடைபெற்று வருகிறது.

இதனை முடிவுக்கு கொண்டு வர அமெரிக்கா உள்ளிட்ட பல்வேறு நாடுகள் தீவிரமாக முயன்று வருகின்றன. அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளின் கடும் எதிர்ப்பையும் மீறி ரஷ்யா, உக்ரைன் மீதான தாக்குதலை தொடர்ந்து வருகிறது.

இதனிடையே, இன்று உலகம் முழுவதும் கிறிஸ்மஸ் பண்டிகை கொண்டாடப்பட உள்ள நிலையில், ஒருதினம் மட்டும் போர்களை நிறுத்தி, உலக அமைதியை கடைப்பிடிக்க வேண்டும் என்று போப் 14ஆவது லியோ கோரிக்கை விடுத்தார். ஆனால் போப்பின் இந்தக் கோரிக்கையை ரஷ்யா நிராகரித்து விட்டது.

இதனால், வேதனை அடைந்த போப் 14ஆவது லியோ ரோமிற்கு அருகே உள்ள காஸ்டல் கண்

# வெற்றிகரமாக விண்ணில் பாய்ந்தது அமெரிக்க செயற்கைக்கோள் புளூபேர்ட்!



(டில்லி)

இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான இஸ்ரோ உள்நாடு வெளி நாடுகளின் செயற்கைக் கோள்களை விண்ணில் ஏவி வருகிறது.

அந்தவகையில் அமெரிக்காவின் ஏ.எஸ்.டி. தொலைத்தொடர்பு நிறுவனத்திற்கு சொந்தமான தகவல் தொடர்பு சேவைக்கான புளூபேர்ட் பிளாக்-2 செயற்கைக்கோளை இஸ்ரோ நேற்று வெற்றிகரமாக விண்ணில் ஏவியுள்ளது.

விண்வெளியில் இருந்து நேரடியாக ஸ்மார்ட் போன்களுக்கே அதிவேக இணைய சேவையை வழங்குவதுதான் இந்த செய்ற்கைக் கோளின் பிரதான நோக்கமாகும்.

இதன்மூலம் தொலைத் தொடர்பு கோபுரங்கள் இல்லாத அடர்ந்த காடுகள், மலைப்பகுதிகளிலும் 5ஜி வேகத்தில் இணையம், வீடியோ அழைப்புகள் மற்றும் குறுஞ்செய்தி சேவைகளை பெறமுடியும்.

புளூபேர்ட் பிளாக் செயற்கைக்கோள் 6,100 கிலோ எடை கொண்டதாகும்.

இந்த செயற்கைக் கோள் எல்.வி. ணில் ஏ

ஆந்த உள்ள ச மையத் தில் இ மணிக் செயற் பட்டது.

இதன கொண் முதலா ஏவி இ

இது செயற் உட்பட பிரெஞ்சு

தற்போ செயற் இஸ்ரோ




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# ...வு போரை நிறுத்துங்கள்

# ...கையை நிராகரித்த ரஷ்யா!

...தினத்தன்று போர் ...ய்யுமாறு விடுத்த ...ப ரஷ்யா நிரா... வேதனை அளிப்... 14ஆவது லியோ ...ார்.



...டால்போ இல்லத்தில் செய்தியாளர்களை சந்தித்துப் பேசினார். அப்போது, அவர் கூறியதாவது: கிறிஸ்மஸ் தினத்தன்று போர் நிறுத்தம் செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை ரஷ்யா நிராகரித்திருப்பது எனக்கு வேதனையளிக்கிறது. எங்கள் கடவுளின் பிறந்த நாளில் குறைந்த பட்சம் ஒருநாளாவது, சமாதானத்தை கடைப்பிடிக்க வேண்டும் என்ற நல்லெண்ணம் கொண்ட அனைவருக்கும் மீண்டும் கோரிக்கை விடுக்கிறேன். இந்தக் கோரிக்கையை அவர்கள் கேட்பார்கள் என்று நம்புகிறேன்.

உலகம் முழுவதிலும் 24 மணிநேர சமாதானம் நிலவும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது, இவ்வாறு அவர் கூறினார். இந்த மாதத்தின் தொடக்கத்தில் போப் 14ஆவது லியோ உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் ஜெலென்ஸ்கியை சந்தித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.(3)

## பாகிஸ்தானில் துப்பாக்கிச் சூடு

- 5 பொலிஸார்
- 8 பயங்கரவாதிகள்

**உயிரிழப்பு**



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் வடமேற்குப் பகுதியில் பயங்கரவாதிகளும் பொலிஸ் தரப்பினரும் நடத்திய துப்பாக்கிச் சூடு மற்றும் குண்டுத் தாக்குதலில் 5 பொலிஸாரும் 8 பயங்கர வாதிகளும் கொல்லப்பட்டதாக அந்நாட்டுப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பாகிஸ்தானின் கைபர் பக்துன்குவா மாகாணத்தில் கராக் மாவட்டத்தில் நடத்தப்பட்ட இத்தாக்குதலில் 5 பொலிஸார் கொல்லப்பட்டதாக அந்நாட்டு உள்துறை அமைச்சர் மொஹ்சின் நக்வி அறிக்கை வெளியிட்டார்.

தாக்குதல் நடத்தப்பட்ட பின்னர், பொலிஸார் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டபோது, அப்பகுதியில் 8 பயங்கரவாதிகள் கொல்லப்பட்டிருந்தமை தெரியவந்துள்ளது.

இந்நிலையில், இத்தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்துள்ள பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப், பயங்கரவாதத்துக்கு எதிரான போரில் பொலிஸ் தரப்பினர் எப்போதும் முன்னின்று செயற்படுவதாக குறிப்பிட்டுள்ளார்.

மொஹ்சின் நக்வி கூறுகையில், பொலிஸ் உத்தியோகத்தர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலானது கொடூரமான காட்டுமிராண்டித்தனமான செயல் என்றும் தியாகிகளின் தியாகங்கள் வீண்போகாது, இதற்கு அரசு முழுப் பலத்துடன் பதிலளிக்கும் என்றும் கூறியுள்ளார்.

தாக்குதலில் தொடர்புபட்ட பயங்கரவாதிகளை தேடும் நடவடிக்கையில் பாகிஸ்தான் பாதுகாப்புப் படையினர் தொடர்ந்து ஈடுபட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது. (3)


...கோள் பாகுபலி ராக்கெட்டான ...ல்.வி.எம்.3 - எம்.6 மூலம் விண்...ணில் ஏவப்பட்டது.

ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் ...ள்ள சதீஷ் தவான் விண்வெளி ஆய்வு ...மையத்தில் உள்ள 2ஆவது ஏவுதளத்...ல் இருந்து நேற்றுக் காலை 8.55 ...ணிக்கு பாகுபலி ராக்கெட் மூலம் ...செயற்கைக்கோள் விண்ணில் ஏவப்...ட்டது.

இதன் மூலம் 6,100 கிலோ எடை ...கொண்ட செயற்கைக்கோளை முதன் ...முதலாக வெற்றிகரமாக விண்ணில் ...வி இஸ்ரோ சாதனை படைத்துள்ளது.

இதுபோன்ற அதிக எடைகொண்ட ...செயற் கைக்கோள்களை அமெ ரிக்கா ...உட்பட பல்வேறு நாடுகள் முன்னதாக ...ரெஞ்சு கயானாவில் இருந்து ஏவின.

தற்போது, இவ்வளவு எடைகொண்ட ...செயற்கைக்கோளை முதல் முறையாக ...ஸ்ரோ ஏவியுள்ளது. (3)



## துருக்கியில் விமான விபத்து

### லிபிய இராணுவ பிரதானி உட்பட

# 8 பேர் உயிரிழப்பு!

(அங்காரா)

துருக்கி தலைநகர் அங்காரா அருகே நிகழ்ந்த கோர விமான விபத்தில், லிபிய இராணுவ பணிக் குழாம் பிரதானி ஜெனரல் மொஹமட் அலி அஹமட் அல் - ஹத்தாத் உட்பட 8 பேர் உயிரிழந்தனர்.

நேற்று முன்தினம் இரவு அங்காராவின் எசன்போகா விமான நிலையத்திலிருந்து லிபிய தலைநகர் திரிப்போலி நோக்கிப் புறப்பட்ட "தஸால்ட் போல்கன் 50" ரக தனியார் ஜெட் விமானம், புறப்பட்ட 40 நிமிடங்களில் ரேடார் தொடர்பிலிருந்து துண்டிக்கப்பட்டது.

இந்த விபத்தில் அல் - ஹத்தாத் உடன் பயணம் செய்த நான்கு உயர்மட்ட இராணுவ அதிகாரிகளும், மூன்று விமானக் குழுவினரும் சம்பவ இடத்திலேயே பலியாகினர்.

துருக்கிய அதிகாரிகளின் முதற்கட்ட விசாரணையின்படி, இந்த விபத்தில் எவ்வித சதி வேலைகளும் இடம்பெறவில்லை என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

விமானத்தில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு, குறிப்பாக மின் கசிவு காரணமாக அவசரமாகத் தரையிறங்க முயன்றபோது ஹய்மானா மாவட்டத்தின் கெசிக்கா வக் கிராமத்திற்கு அருகில் விமானம் வெடித்துச் சிதறியதாகத் தெரியவந்துள்ளது.

துருக்கி மற்றும் லிபியா இடையிலான இராணுவ ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான உயர்மட்ட பேச்சுவார்த்தையில் கலந்துகொண்ட பின்னர் அவர்கள் நாடு திரும்பிய போது இந்தத் துயரம் நிகழ்ந்துள்ளது.

லிபிய இராணுவத்தை ஒன்றிணைப்பதில் முக்கிய பங்காற்றிய அல்-ஹத்தாத்தின் மறைவு நாட்டிற்குப் பேரிழப்பு என அந்த நாட்டு பிரதமர் அப்துல் ஹமீத் தபீபா தெரிவித்துள்ளார்.

மேற்கு லிபியாவில் செல்வாக்கு மிக்க அதிகாரியாகத் திகழ்ந்த அவர், பிளவுபட்டுக் கிடக்கும் நாட்டை ஐக்கிய நாடுகள் சபையின் மத்தியஸ்தத்துடன் ஒருங் கிணைக்கும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டு வந்தார்.

இவரின் மறைவையொட்டி லிபியாவில் மூன்று நாட்கள் தேசிய துக்கம் அறிவிக்கப்பட்டு, அனைத்து அரச அலுவலகங்களிலும் தேசியக் கொடி அரைக்கம்பத்தில் பறக்க விடப்பட்டுள்ளது.

துருக்கி அரசு இது குறித்து விரிவான விசாரணையைத் தொடங்கியுள்ள நிலையில், லிபியாவிலிருந்து ஒரு விசேட குழுவும் அங்கு விரைந்துள்ளது. (3)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீட்பரே வருக!



**நற்கருணை நாதன் யேசு**
**இன்சொல் கேளீர்**

நானே உலகின் ஒளி
நானே உண்மை வழி; வாழ்வு
நானே நல்ல ஆயன்
நானே வாழ்வின் அப்பம்
நானே திராட்சைக் கொடி

**அற்புதமான போதனைகளைத் தந்த**
**தேவன் விருப்புடன்**

அன்னை மரியாள் வயிற்றினிலே ஜெனனமாகினார் - முன்
சொன்ன வார்த்தை பலிதமாக மனிதனாகினார்
தாவீது வம்சவழித் தோன்ற லாகினார்
தேவமைந்தன் என்றே ஏற்கும் புனிதனாகினார்

மலரென மனதினைத் திறந்து வைத்துன்
பதமதை நாம் பணிந்தோம்
வருக நின் அரசு, வளர்க நின் திருவுளம்

**அன்புடன்**
**கலாபூஷணம் - மு.தணிகாசலம், கற்கோவளம்.**


## பாலகன் பிறப்பு
## மலையகம் செழிப்புறும்



உலையிட்ட பொன் போன்ற யேசுமரி பாலகன்
ஊர்குளிரில் உறைந்த வேளை தொழுவத்தில் பிறந்தார்
மலைவாழ் மக்களின் மகிழ்வான வாழ்வும்
மழை நீரால் மலை வீழ்ந்து மனம் துடித்த பேரவலம்
நிலையான வாழ்வு மீளவும் மடிநிறைய
நம் யேசு இறைமகன் கருணை புரிவாரே
தொலைந்த வாழ்வும் தேனாய் உளமினிக்க
தொழுவோம் தேவன் துணை நிதமும் பொழிவாரே.

**"கலாபூசணம்" கே.ஆர்.திருத்துவராஜா**

## உத்தமனார் உதித்தார்



இத்தலம் யாவும் புத்துயிர் பெற்றிட
உத்தமனார் உதித்தார் - எமக்கு
நித்தம் நிலையான நிம்மதி தந்திட
நித்தியனார் உதித்தார்
சத்தியம் ஜெயித்திட சாபமும் உய்த்திட
சத்தியனார் உதித்தார் - உயர்
பெத்தல கேமின் முத்தெனப் போற்றும்
வித்தகனார் உதித்தார்

இத்தரை மாந்தரின் எத்துணை பாவங்கள்
அத்தனையும் போக்க - பெரும்
பத்தரை மாற்றுப் பசும்பொன் னாய்ப்பரி
சுத்தன் நமைக்காக்க
உத்தம தேவனின் உன்னதன் மானிட
புத்திரனாய் உதிக்க - தேவன்
இத்தனை யாயிவ் உலகினில் அன்பினைக்
கூர்ந்தார் உளம்வியக்க



ஆதியின் மனிதர் ஆதாம் ஏவாள்
அவனியிலே விதைத்து - தேவ
நீதிக்கு எதிராய்ப் புவியினில் பாவம்
பெருமரமாய் முளைத்து
மேதினி தன்னை மேவிய பாரிய
விருட்சத்தை எரித்து - தூய
ஜோதியாய் ஒளிதர வந்தார் மானிட
ஜென்மம் அவதரித்து

**டே.த எட்வின், உடுவில்.**

# பேரிடரில் உதயமான மனித நேயம் அனைவரும் ஒன்றிணைவோம்



**யாழ்.மறைமாவட்ட ஆயர்**

2025 யூபிலி ஆண்டு கிறிஸ்து பிறப்பு விழாவை கொண்டாடும் உங்கள் அனைவருக்கும் கிறிஸ்து பிறப்பு விழா நல்வாழ்த்துக்களை தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். வார்த்தை மனுவுருவாகி நம்மிடையே குடிகொண்ட மாபெரும் மறை நிகழ்வை கொண்டாடும் இந்நாளில் பாலக யேசுவின் அருளும் ஆசீரும் என்றும் உங்களுடன் இருக்க ஆசிக்கின்றேன்.

கிறிஸ்து பிறப்பு விழா, கடவுள் தன்னை எமக்கு கொடையாக தந்த மாபெரும் பகிர்வின் விழா. காரிருள் சூழ்ந்த மனுக்குலத்தை, ஒளியின் பாதையில் வழிநடத்திச் செல்ல ஏழ்மையின் கோலம்பூண்ட இறைவன், தன்னை தாழ்த்தி பேரிடர் மத்தியில் மனுவுரு எடுத்த விழா.

இவ்விழாவை கொண்டாடும் எமக்கு, இலங்கை தேசத்தில் அண்மையில் நடைபெற்ற இயற்கை அனர்த்தம் பெரும் துன்பியல் அனுபவத்தை தந்தாலும், மனுவுருவேற்பின் மறை பொருளையும், பகிர்தலினால் பிறக்கும் பெரும் மகிழ்வையும் அதிகமாக உணர்ந்துகொள்ளும் வாய்ப்பையும் ஏற்படுத்தி தந்துள்ளது. இயற்கை பேரிடரில், கொல்லப்பட்டவர்கள், காணாமல் போனவர்கள், அங்கவீனமானவர்கள், வீடிழந்தோர், சொத்திழந்தோரென துன்பப் பட்டியல் நீண்டுசெல்லும் இந்நாட்களில், கிறிஸ்து பிறப்பு, கடவுள் நம்முடன் இருக்கின்றார் என்ற உண்மையை வலியுறுத்தி, இறை பலத்தோடு துன்பங்களை தாண்டிச் செல்ல நம்பிக்கை தருகின்றது.

பேரிடர், அதனால் ஏற்படும் துன்பங்கள், வலிகள், இழப்புக்கள், இடப்பெயர்வுகள் போன்றவை, தமிழ் மக்களுக்கு புதியவையல்ல. கடந்த காலங்களில் இவைகள் எல்லாவற்றையும் தமிழ் மக்கள் தமது வாழ்வியலுக்குள் கரைத்துக் கொண்டவர்கள். அதனால்தான் பேரிடரால் பாதிக்கப்பட்ட மக்களின் வலிகளை உடனடியாக உணர்ந்துகொண்டு தன்னார்வத் தொண்டர்களாக உதவிக்கரம் நீட்டி விரைந்து செயற்பட்டார்கள். பேரிடர் காலத்தில் மக்கள் ஒருவரை ஒருவர் தாங்கிக் கொண்டு தங்களிடம் உள்ளதை மற்றவர்களுடன் பகிர்ந்துகொண்ட விதம் குறிப்பாக யாழ்.மறைமாவட்ட குருக்கள், துறவிகள், இறைமக்களின் இப்பணி இறை பிரசன்னத்துடன் இணைந்த மனித நேயத்தின் உயர் வெளிப்பாடாக அமைந்துள்ளது. இதனையே கிறிஸ்து பிறப்பு விழா நமக்கு உணர்த்துகின்றது.

இலங்கை நாடு, சிங்கள பௌத்த பேரினவாதம், உள்நாட்டு யுத்தம், பொருளாதார சிக்கல், ஆட்சி மாற்றம், இயற்கை பேரிடர், பூகோள அரசியல் மாற்றத்தால் ஏற்படும் சர்வதேசத் தலையீடு, போன்றவற்றை ஊடறுத்து நகர்ந்து கொண்டிருக்கும் சூழலில் தமிழ் மக்களுக்கான நிரந்தர தீர்வை பெற்றுக்கொள்வதிலுள்ள காலதாமதம் தமிழ் மக்களுக்கு மிகுந்த ஏமாற்றத்தை கொடுப்பதையும் இவ் இடத்தில் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். பேரிடரில் வெளிப்பட்ட மனிதநேயம் இலங்கை நாட்டில் நிரந்தரமாக குடியிருக்க தற்போதைய அரசு விரைந்து செயற்பட்டு இனப்பிரச்சினைக்கான நிரந்தர தீர்வை பெற்றுக் கொடுக்க முன்வர வேண்டும். வன்முறை தவிர்த்து, சரியான புரிதலோடு அகிம்சை வழியில் பாலக யேசு கொணர்ந்த நிரந்தர அமைதியை ஏற்படுத்த அனைவரும் ஒன்றிணைவோம்.

# "வார்த்தை மனுவுருவானார்"



எல்லா மக்களுக்கும் பெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கின்றேன். ஆண்டவராகிய மெசியா என்னும் மீட்பர் உங்களுக்காக தாவீதின் ஊரில் பிறந்திருக்கிறார். குழந்தையை துணிகளில் சுற்றி தீவனத் தொட்டியில் கிடத்தியிருப்பதைக் காண்பீர்கள் (லூக்கா 2:10-11) எத்திசையிலும் மகிழ்ச்சியின் பிரதிபலிப்பு. பிரபஞ்சம் முழுவதும் பரவசத்தால் நிறைகின்றது. மெசியாவின் வருகையைப் பற்றி பல நூற்றாண்டுகளுக்கு முன்பாக இறை வாக்கினர்கள் எதிர்வு கூறியிருந்த நிகழ்வு மாட்டுத்தொழுவத்தில் நிறைவு பெறுகின்றது.

கிறிஸ்மஸ் என்பது இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக நடந்த ஒரு சம்பவத்தை நினைவுகூரும் சாதாரண நிகழ்ச்சி அல்ல. உளையான சேற்றுக்குள் விழுந்த மனிதனை மீட்கும்படி மனித உருவெடுத்த கடவுளின் அன்பை நினைவுகூரும் நாள்.

பலவீனமாக்கும் சுமைகளை சுமந்து சோர்வடைந்த மனிதனிடம் கடவுள் காண்பிக்கும் இரக்கத்தை நினைவுகூரும் நாள். தாழ் நிலையில் உள்ளோரை கடவுள் கண்ணோக்கி யதை நினைவுகூரும் நாள்.

"மகளே சீயோன்! முகிழ்ந்து களிகூறு, மகளே எருசலேம்! ஆர்பரி, இதோ! உன் அரசர் உன்னிடம் வருகின்றார்" (செக்கரியா 9:9) என்று முன்னறிவிக்கப்பட்ட சமாதானத்தின் அரசராகிய இயேசு பிறந்தது மாளிகையில் அல்ல, மாட்டுத்தொழுவத்தில் அவர் வளர்க்கப்பட்டது பஞ்சனை தொட்டிலில் அல்ல, தீவனத்தொட்டியில் அவரின் பிறப்பின் செய்தி முதலில் அறி விக்கப்பட்டது அரசர்களுக்கு அல்ல, ஏழை இடையர்களுக்கு இதுதான் இயேசு தமது பிறப் பின் மூலம் நமக்கு கற்றுத்தந்த தாழ்ச்சி. ஆகவே கிறிஸ்மஸ் நமக்கு தாழ்ச்சியின் கொண்டாட்ட மாகவே அமைய வேண்டும்.

இயேசு நம் இதயங்களிலும், வாழ்க்கை யிலும், பிறக்க வேண்டும் நம் பலவீனங்களின் மத்தியிலும்கூட நம்மில் பிறக்க அவர் ஆவலாக உள்ளார். அவர் நம்மில் பிறக்க வேண்டும் என்றால் சில தியாகங்களை செய்ய நாம் தயாராக இருக்க வேண்டும். வெளிவேடக்கார மனிதர்களுக்கு இயேசு எப்போதும் அந்நியராக, அவர்களுக்கு எட்டாத தூரத்தில்தான் இருப்பார். மனிதர்கள் தங்கள் வெளிவேடத்தை அகற்றிவிட்டு எளிமையோடும், தாழ்ச்சியோடும் வாழும்போது தான் கடவுளைக் காணமுடியும். இயேசுவின் காலத்தில் வாழ்ந்த யூத மக்கள்கூட தங்களுடைய வெளிவேடத்தினால் தாங்கள் எதிர்பார்த்து காத்திருந்த மெசியா என்றும் இயேசு தங்கள் மத்தியிலே வாழ்ந்திருந்தும் அவர்களால் அவரை கண்டுணர முடியவில்லை.

ஒவ்வொரு கிறிஸ்மஸ் விழாவும் நமக்கு எதிர்பார்ப்பு நிறைந்ததாய் இருக்க வேண்டும். நம்முடைய பாவங்களிலிருந்து நம்மை விடுதலையாக்கக் கூடிய மீட்பின் வரலாறு அதற்கு உண்டு. இயேசு நம் வாழ்வில் வந்து பிறப்பார். உடைந்த, சிதைந்த நம்முடைய வாழ்க்கையில் அவர் பலத்தையும் சமாதானத் தையும் தருவார். அதுதான் உண்மையான கிறிஸ்மஸ். நம் மீட்புக்கும் அவர்தான் ஒரேவழி, அவரே வழியும், உண்மையும், வாழ்வுமாய் இருக்கின்றார். உலகத்தை மூடிக்கொண்டு குருடாக்கும் இருளை விரட்டும் ஒளியும் அவர்தான்.

**க.அருள்நேசன், குருநகர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னாரில் களை கட்டியது பண்டிகைக்கால வியாபாரம்



(மன்னார்)

நத்தார் மற்றும் புதுவருட பண்டிகை காலத்தை முன்னிட்டு மன்னார் நகர சபை பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் தற்போது பண்டிகை கால வியாபார நடவடிக்கைகள் சூடு பிடித்துள்ளன.


மன்னார் நகர சபையினால் கேள்வி கோரல் அடிப்படையில் சுமார் 350 இற்கும் மேற்பட்ட வியாபார நிலையங்கள் அமைக்க இடம் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிலையில் வியாபார நடவடிக்கைகள் இடம் பெற்று வருகின்றன.

அத்துடன் உள்ளூர் மற்றும் தென் பகுதி வியாபாரிகள் இடத்தை குத்தகை அடிப்படையில் கொள்வனவு செய்து வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

எதிர்வரும் 31 ஆம் திகதி வரை குறித்த பண்டிகை கால வியாபார நடவடிக்கைகள் இடம் பெறவுள்ளதுடன் தற்போது மாவட்டத்தின் பல பாகங்களில் இருந்தும் மக்கள் மன்னார் நகர் பகுதிக்கு வருகை தந்து பொருட்களை கொள்வனவு செய்து வருகின்றமையை காணக் கூடியதாக உள்ளது. (8-285)

# பாடசாலை வளாகத்திலுள்ள வீதியை புனரமைத்து தாருங்கள்

## பெற்றோர்கள் கோரிக்கை



(தருமபுரம்)

கிளிநொச்சி தெற்கு கல்வி வலயத்திற்குட்பட்ட கோணாவில் காந்தி ஆரம்ப வித்தியாலய வளாகத்தில் உள்ள வீதியானது சேதமடைந்துள்ளதாக பெற்றோர்கள் கவலை தெரிவித்துள்ளனர். கடந்த வருடம் ஏப்ரல், மே மாதங்களில் புனரமைக்கப்பட்ட வீதியே இவ்வாறு சேதமடைந்து காணப்படுகிறது.

எனவே குறித்த வீதியினை புனரமைப்பதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பெற்றோர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (8-316)

### 15 காணி உரிமையாளர்களுக்கு

# சிவப்பு எச்சரிக்கை

(கரணவாய்)

வல்வெட்டித்துறை நகராட்சி மன்றத்தின் எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் டெங்கு கட்டுப்பாட்டு செயற்றிட்டமானது நேற்றைய தினம் முன்னெடுக்கப்பட்டது.

இதன் போது 514 ஆதனங்கள் பரிசோதிக்கப்பட்டது. 133 இடங்கள் நுளம்பு பரவக்கூடிய சூழலாக இனங் காணப்பட்டது.

அத்துடன் 15 ஆதன உரிமையாளர்களுக்கு எதிராக சிவப்பு அறிவித்தல் வழங்கப்பட்டதுடன் நுளம்பு குடம்பிகளுடன் சுற்றாடலினை பேணிய 13 குடியிருப்பாளர்களிற்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (8-60)



# சந்தைகளில் நேற்றைய விலை

பொருளாதார மத்திய நிலையம்

| மரக்கறி வகைகள் | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி | வவுனியா | மட்டுவில் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 900 | 900 | 800-1000 | 900 | 550 | 800 |
| உருளைக்கிழங்கு | 220 | 200 | -- | 250 | 300 | -- |
| பச்சைமிளகாய் | 1200 | 800 | 1200-1400 | 1100 | 900 | 1000 |
| தக்காளி | 700 | 600 | 700 | 800 | 550 | 700 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 200 | 140 | 150 | 90 | 180 |
| கோவா | 300 | 400 | 300 | 400 | 270 | 300 |
| கரட் | 330 | 400 | 350 | 400 | 260 | 300 |
| பூசணி | 140 | 150 | 120 | 150 | 80 | 100 |
| புடோல் | 450 | 400 | 550 | 600 | 450 | 500 |
| வாழைக்காய் | 80 | 150 | 80-120 | 200 | 120 | 80 |
| சின்ன வெங்காயம் | 250-300 | 300 | 200-350 | 600 | 350 | -- |
| பெரிய வெங்காயம் | 240 | 200 | -- | 250 | 230 | 220 |
| பாகற்காய் | 1300 | 1500 | 1400 | 2000 | 1100 | 1200 |
| வெண்டக்காய் | 250 | 400 | 280-350 | 600 | 300 | 300 |
| கருணைக்கிழங்கு | 260 | 300 | 250 | 400 | 300 | -- |
| பயற்றங்காய் | 800 | 1000 | 1100-1400 | 1000 | 700 | 800 |
| லீக்ஸ் | 350 | 400 | 350 | 400 | 260 | 300 |
| பீற்றூட் | 400 | 600 | 500 | 700 | 350 | 600 |
| கறிமிளகாய் | 1100 | 1000 | 1000 | 1200 | 900 | 800 |
| முருங்கைக்காய் | -- | 2000 | 2000 | -- | -- | -- |
| போஞ்சி | 800 | 1000 | 850 | 1000 | 900 | 700 |
| கத்தரிதம்புள்ள | 700 | 600 | -- | 800 | -- | -- |
| கீரை - 1 பிடி | 140-200 | 200 | 180 | 250 | 150 | -- |
| தேசிக்காய் | 600 | 400 | 250-600 | 400 | 150 | 350 |
| தேங்காய் (ஒன்று) | 200 | 150 | 70-170 | 150-200 | 110 | -- |
| இராசவள்ளி | 700 | 500 | 480 | 600 | 475 | -- |
| வெங்காயப்பூ | 1000 | 600 | 800 | 800 | -- | -- |
| முள்ளங்கி | 250 | 400 | 120 | 400 | 200 | 300 |
| பொன்னாங்காணி | 140 | 200 | -- | 80 | 50 | -- |
| வல்லாரை | 70 | 100 | -- | 150 | 60 | -- |
| ஈரப்பலா | 150 | 150 | 50-80 | 200 | -- | -- |

# இராசிபலன்

25.12.2025
மார்கழி 10 , வியாழக்கிழமை
பஞ்சமி முற்பகல் 11.26 மணி வரை

அவிட்டம் காலை 6.45 மணிவரை
சுபநேரம் 7.56-9.26 மணிவரை
இராகுகாலம் 1.56-3.26 மணிவரை
திருவெம்பாவை பூசை ஆரம்பம்

நத்தார் பண்டிகை
பாலகன் பிறப்புப் பெருவிழா
சந்திராஷ்டமம்- ஆயில்யம்

வளவன்




ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், குடும்பத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும்,போசன சுகமுண்டு.




சமுதாயத்தில் உயர்ந்த நிலைக்கு வரத் தோன்றும், தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள்.




ஆரோக்கியத்தில் முன்னேற்றமுண்டு, வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள், விட்டுப்போன தொடர்புகள் மீண்டும் வந்து சேரலாம்.




நேசித்த ஒருவருடன் யோசித்துப் பேசும் சூழ்நிலை ஏற்படலாம், கவலைகள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள், உடல் நலனில் கவனம் தேவை.




மனதிற்கினிய சம்பவங்கள் இடம் பெறலாம், நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், போசன சுகமுண்டு.




இனத்தார் பகை மாற எடுத்த முயற்சிகள் கைகூடும், சுவாரஸ்யம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், வழிபாட்டில் ஆர்வம் கூடும்,காரிய அனுகூலமுண்டு.




கொள்கைப்பிடிப்போடு செயற்படுவீர்கள், கோரிக்கைகள் நிறைவேற கோயிலுக்குச் செல்ல வேண்டிய நாள், நிதிநிலை உயர வழிவகை செய்வீர்கள்.




நண்பர்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், சுப காரியப் பேச்சுக்களில் ஆர்வம் காட்டுவீர்கள், குடும்பத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும்.




ஆரம்பத்தில் அச்சுறுத்தலாக தோன்றிய தகவல் முடிவில் ஆதாயத்தைக் கொடுக்கலாம், வியாபார விருத்தியுண்டு, எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காணும் நாள்.




அன்பு நண்பர்களின் ஆதரவு கிடைக்கும், பொது வாழ்க்கையில் புகழ் கூடும், பண வரவு திருப்தி தரும், குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் கூடும்,வாக்கு மேன்மையுண்டு.




விருப்பங்கள் நிறைவேற விநாயகரை வழிபட வேண்டிய நாள், நேற்றைய பிரச்சினையொன்று நல்ல முடிவுக்கு வரலாம், போசன சுகமுண்டு.




எப்படி நடக்குமோவென நினைத்த காரியம் நல்ல விதமாக அமையும் வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும்.

உ[illegible] மிகப்பெரிய ஆயுதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 941





முந்நூறு கப்பல்களைச் சேகரித்துக் கொடுப்பதிலும் கஷ்டம் ஒன்றுமில்லை. தாங்கள் சம்மதிக்க வேண்டும்! மதுராந்தகத் தேவனும் சம்மதிக்க வேண்டும்! அவ்வளவுதான்! என்ன சொல்லுகிறீர்கள்?" என்று கரிகாலன் நிறுத்தினான்.

திணறித் திண்டாடித் திக்கு முக்காடிப் போன பழுவேட்டரையர் தொண்டையை மறுபடியும் கனைத்துக் கொண்டு கூறினார்: "கோமகனே! தங்கள் அதிசயமான விருப்பத்துக்கு நான் சம்மதித்தாலும், மதுராந்தகத் தேவரின் சம்மதம் எப்படியும் வேண்டும் அல்லவா? சக்கரவர்த்தியிடம் விடை பெற்றுக் கொள்ளாமல் தாங்கள் திக்விஜயத்துக்குப் புறப்பட முடியுமா? ஆகையால் எல்லோருமாகத் தஞ்சாவூருக்குப் போவோம்"

"அது மட்டும் முடியாது. பாட்டா, தஞ்சாவூருக்குப் போன பிறகு என் தந்தை வேறு விதமாகக் கட்டளையிட்டால் என்னால் அதை மீற முடியாமற் போய்விடும். அப்புறம் அங்கே என் அன்னை, மலையமான் மகள், இருக்கிறாள். என் சகோதரி இளைய பிராட்டி இருக்கிறாள். அவர்களுக்கு நான் முடிதுறந்து தேசாந்தரம் செல்வது சம்மதமாயிராது. அவர்கள் பேச்சை மீறுவதும் கஷ்டமாயிருக்கும். பாட்டா! இந்த விடயம் இந்தக் கடம்பூர் மாளிகையில்தான் முடிவாக வேண்டும்.

தாங்கள் தஞ்சைக்குப் போய் மதுராந்தகனை இங்கே அழைத்து வாருங்கள். நமக்குள் பேசி முடிவு செய்த பிறகு தந்தையிடம் தெரிவிக்கலாம். படையெடுப்புக்கு எல்லாம் ஆயத்தமான பிறகு நான் தஞ்சைக்கு வந்து என் பெற்றோர்களிடம் விடைபெற்றுக் கொண்டு கிளம்புகிறேன். அல்லது மதுராந்தகனுக்கு இப்போதே பட்டம் கட்டி விட்டு என் பெற்றோர்கள் காஞ்சிக்கு வரட்டும். அங்கே நான் கட்டியிருக்கும் பொன் மாளிகையில் அவர்களை இருக்கச் செய்துவிட்டு நான் புறப்படுகிறேன்" என்றான்.

பழுவேட்டரையர் சம்புவரையரைப் பார்த்தார். சம்புவரையரோ கூரை மேட்டைப் பார்த்துக் கொண்டிருந்தார். அவரிடமிருந்து உதவி ஒன்றும் கிடைப்பதற்கில்லையென்று கண்டு, பழுவேட்டரையர் "கோமகனே! தங்களுடைய கட்டளைக்கு மாறாக நான் என்ன சொல்ல முடியும்?" என்றார்.

"கட்டளை என்று சொல்லாதீர்கள், பாட்டா! சோழ சாம்ராஜ்யத்தின் சேவையில் தலை நரைத்துப் போன தங்களுக்கு இந்தச் சிறு வனா கட்டளையிடுவது? என்னுடைய பிரார்த்தனையை நிறைவேற்றி வைப்பதாகச் சொல்லுங்கள்!" என்றான் ஆதித்த கரிகாலன்.

"ஆகட்டும்" என்று சொல்லிப் பழுவேட்டரையர் கனைத்துக் கொண்டார்.


"மிக்க வந்தனம், பாட்டா! அப்படியானால் சீக்கிரமே புறப்படுவதற்கு ஏற்பாடு செய்யுங்கள்! மதுராந்தகனைப் பகிரங்கமாகவே யானை மீது ஏற்றி வைத்து இவ்விடத்துக்கு அழைத்து வாருங்கள். அல்லது பொன் ரதத்தில் ஏற்றி அழைத்து வாருங்கள். இளைய பாட்டியின் மூடு பல்லக்கு மட்டும் இந்தத் தடவை வேண்டாம்!" என்று சொல்லிவிட்டுச் சிரித்தான் கரிகாலன்.

தொடரும்...



# சிறுவர் அரங்கம்

## தாய்மையின் சக்தி



ஒரு மலைப் பிரதேசத்தில் மலை உச்சியில் ஓர் இனத்தாரும், அடிவாரத்தில் இன்னொரு இனத்தாரும் வாழ்ந்து வந்தார்கள். இரு இனத்தாருக்கும் எப்போதும் பகை.

ஒரு முறை உயரத்தில் இருந்தவர்கள் அடிவாரத்தைச் சேர்ந்த ஒரு குழந்தையைக் கடத்தி விட்டார்கள்.

சமூகத்திலிருந்த சில பெரியவர்கள், மலைமேல் இருந்த சமூகத்தினரிடம் சமாதானமாகப் போய் பேசினால் குழந்தையை மீட்டு வந்துவிடும் சாத்தியம் இருப்பதாக ஊரில் உள்ள இளைஞர்களிடம் அறிவுரை கூறினர்.

இளைஞர்கள் சிலர் உடனே முன்வந்தார்கள். அவர்கள் கடினமான வேலைகள் செய்து பழகியவர்கள். எந்தச் செயலை எடுத்தாலும் அதை விடா முயற்சியுடன் முடிக்கும் மனப்போக்கைக் கொண்டவர்கள்.

ஊர் பெரியவர்களும், இந்தச் செயலை முடிக்க இவர்கள்தான் சிறந்தவர்கள் என்று அவர்களை வாழ்த்தி அனுப்பி வைத்தார்கள்.

இளைஞர்களும் ஆர்வத்துடன் கிளம்பினார்கள். அந்த மலையின் சில பகுதிகள் மிகவும் செங்குத்தானவை. அந்த இளைஞர்களால் அப்படி ஒரு பகுதியை ஏறிக் கடக்க முடியவில்லை. விடா முயற்சியுடன் அப்பகுதியைக் கடக்க பலமணி நேரமாக பல வழிகளில் முயன்று கொண்டிருந்தனர். களைத்துப் போனால் ஓய்வெடுத்துக் கொண்டு மீண்டும் முயற்சித்தனர்.

அப்போது தம் ஊரைச் சேர்ந்த ஒரு பெண் மேலேயிருந்து கடத்தப்பட்ட குழந்தையைத் தூக்கிக் கொண்டு கீழே இறங்கி வருவதைப் பார்த்தார்கள். அவள் அருகில் வந்தவுடன் "நாங்கள் ஏற சிரமப்பட்ட மலையை நீ ஏறிச் சென்றுவிட்டாயே! எப்படி?" என்று வியப்புடன் கேட்டார்கள்.

அவள் இடுப்பிலிருந்த குழந்தையைக் காட்டி "இது உங்கள் குழந்தை இல்லை. என் குழந்தை. அதுதான் வித்தியாசம்" என்று பதில் சொன்னாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குணங்களின் தன்மை மேன்மையடையும் போதே ஆசீர்வாதங்கள் நம்மை வந்தடைகின்றன.
– அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

# புனிதர்கள் விரும்பிய மனிதர்களை உருவாக்க சமயங்கள் தவறிவிட்டன

இன்று இயேசுபாலகனின் பிறப்பு நாள். உலகெங்கும் வாழும் கிறிஸ்தவ மக்கள் நத்தார் பெருநாளை இறைவழிபாட்டுடன் இன்று அனுஷ்டிக்கின்றனர்.

ஆம், காலத்துக்குக் காலம் இப்பூமியின் கண் இறையாளர்களும் புனிதர்களும் தோன்றி மனித குலத்தை நன்னெறிப்படுத்துகின்ற பெரும் பணியைச் செய்கின்றனர்.

அதிலும் ஞானவான்களின் போதனைகள், எல்லா உயிர்களிடத்தும் அன்பு செலுத்துகின்ற மிகப்புனிதமான வாழ்வியலை வலியுறுத்துவதாக உள்ளன.

ஆம், இந்த உலகில் பல்வகைச் சமயங்கள் வலுப்பெற்றுள்ளன. சமயங்களினூடு இறை நம்பிக்கையும் மற்றவர்களுக்குத் தீங்கு எண்ணாத வாழ்வை வலியுறுத்துவதும் உன்னைப் போல் பிறரையும் நேசிக்கின்ற மகத்துவத்தைப் பின்பற்றுகின்ற மனநிலையை ஏற்படுத்துவதுமான இலக்கே அமையப் பெற்றிருந்தன.

ஆனால் இன்றைய காலச் சூழ்நிலையில் மனித நேயம்மிக்க, கடவுளுக்கு விசுவாசமான மனிதர்களை உருவாக்குவதில் சமயங்கள் படுதோல்வி கண்டுவிட்டன.

இத்தோல்விக்கு குறித்த சமயங்களோ அன்றி அவற்றின் கொள்கைகளோ காரணமல்ல.

மாறாக சமய வாழ்வுக்காகத் தங்களை அர்ப்பணிக்கப் புறப்பட்ட மதகுருமார்களில் இருந்து சமயம் பிறழ்வடைகின்றது.

ஆம், இறைக் கொள்கையை ஏற்று புனித வாழ்வை மேற்கொள்ளப் புறப்பட்டவர்களின் உண்மையான – நிதர்சனமான வாழ்வு மிகவும் மோசமானது.

அவர்கள் சமயத்தை – இறைக் கொள்கையை தங்களின் சுயநலத்துக்காகப் பயன்படுத்துகின்றனர். மக்களை நல்வழிப்படுத்த வேண்டிய மதகுருமார்களில் கணிசமானவர்கள் பற்றைத் துறக்காதவர்களாக வாழ்கின்றனர்.

ஆம், மதத்தின் பெயரால் – மதகுரு என்ற பதவியால் மக்கள் உரிய மதிப்பை – கௌரவத்தை வழங்குகின்ற போதிலும் சம்பந்தப்பட்டவர்கள் இன, மத வாதத்தை கொட்டித் தள்ளுகின்றனர்.

இவர்களுக்கும் சமயப் பணிக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை என்று மக்கள் அருவருக்கின்ற நிலையில் மதகுருமார்கள் பலர் உள்ளனர்.

இத்தகைய நிலைமை அனைத்துச் சமயங்களிலும் இருக்கவே செய்கிறது.

இங்குதான் மக்களை வழிப்படுத்துவதிலும் இளம் சமூகத்தை ஆற்றுப்படுத்துவதிலும் சமயங்கள் தோல்வி கண்டுவிடுகின்றன.

இதேநிலைமை நீடிக்குமாக இருந்தால்; மதவழிபாட்டுத் தலங்கள் மீதும் மதகுருமார் மீதும் மக்கள் நம்பிக்கையை இழப்பர்.

அவர்களைத் தூற்ற முற்படுவர். அவர்கள் பற்றி மிகமோசமான செய்திகள் சமூகவலைத் தளங்களில் பரவிக் கொள்ளும்.

ஆகவே இயேசுபாலகன் பிறந்த இப்புனித நாளில், தூய அன்பும் தூய இறை பணியும் எல்லாச் சமயங்களிலும் மலர்ச்சி பெறட்டும். அதுமுற்றி அனைவரும் சிந்திக்கட்டும்.

# சுமார் 2,77,000 விவசாயிகள் டித்வா சூறாவளியால் பாதிப்பு

## ஐ.நா உணவு மற்றும் விவசாய அமைப்பு மதிப்பீடு

(கொழும்பு)

டித்வா சூறாவளியினால் சுமார் 2,77,000 விவசாயிகள் பாதிக்கப்பட்டிருப்பதாக ஐ.நா உணவு மற்றும் விவசாய அமைப்பு மதிப்பிட்டுள்ளது.

டித்வா சூறாவளி காரணமாக ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு மற்றும் மண்சரிவு அனர்த்தங்களில் சிக்கிப் பல நூற்றுக்கணக்கானோர் பலியாகியிருப்பதுடன், இலட்சக்கணக்கானோர் தமது இருப்பிடங்களையும் வாழ்வாதாரத்தையும் இழந்து வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இப்பேரனர்த்தத்தினால் விவசாயம், மீன்பிடி மற்றும் கிராமியப் பொருளாதாரத்துக்கு ஏற்பட்டிருக்கும் பாதிப்புக்கள் தொடர்பான ஆரம்பகட்டத் தகவல்கள் அடங்கிய அறிக்கை ஐக்கிய நாடுகள் சபையின் முகவரமைப்பான உணவு மற்றும் விவசாய அமைப்பு வெளியிட்டுள்ளது.

2026 ஆம் ஆண்டின் பெரும்போகத்தை எதிர்பார்த்து பயிர்ச்செய்கையை மேற்கொண்ட மற்றும் பயிரிடுவதற்கு உத்தேசித்திருந்த விவசாயிகள் இப்பேரனர்த்தத்தினால் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருப்பதாக அவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

முதற்கட்ட மதிப்பீட்டின் பிரகாரம் டிசம்பர் 15 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் 106,000 ஹெக்டேயர் நெற்பயிர்ச் செய்கைக்கான விவசாய நிலங்கள் பகுதியளவிலோ அல்லது முழுமையாகவோ சேதமடைந்துள்ளன. இது 2026 பெரும்போகத்தில் மொத்தமாக மேற்கொள்ளப்படும் நெற்பயிர்ச்செய்கையில் 20 சதவீதமாகும்.

இவ்வாறு பதிவாகியுள்ள சேதங்களில் பெரும்பாலானவை புத்தளம், குருநாகல், அம்பாறை, அநுராதபுரம், மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் பதிவானவையாகும்.

நெற்பயிர்ச்செய்கைக்கு அப்பால் சோளம், மரக்கறிகள், பெரிய வெங்காயம் மற்றும் பச்சைப்பயறு ஆகிய பயிர்ச்செய்கை நடவடிக்கைகளும் வெகுவாகப் பாதிப்படைந்துள்ளன.

சிறியளவு நெற்பயிர்ச் செய்கை விவசாயிகள் உள்ளடங்கலாக இப்பேரனர்த்தத்தினால் சுமார் 2,77,000 விவசாயிகள் பாதிக்கப்பட்டிருப்பதுடன், அதன் விளைவாக அவர்கள் பாரிய வாழ்வாதார இழப்புக்கு முகங்கொடுத்துள்ளனர்.

அதேபோன்று இவ்வனர்த்தத்தில் சிக்கி சுமார் 475,000 பறவைகளும் மாடு, எருமை மாடு, ஆடு மற்றும் பன்றி என்பன உள்ளடங்கலாக 50,000 க்கும் மேற்பட்ட விலங்குகளும் உயிரிழந்திருக்கக்கூடும் என மதிப்பிடப்பட்டுள்ளது. *(ம-7)*

# யாழில் போதைப்பொருளுடன் கைதான 10 பேரும்

## புனர்வாழ்வுக்கு அனுப்பிவைப்பு

யாழ்ப்பாணம் நகர் பகுதியில்போதைப்பொருட்களுடன் கைது செய்யப்பட்ட 17 வயது சிறுவன் உள்ளிட்ட 10 பேர் புனர்வாழ்வு மையத்திற்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம்பொலிஸ் தலைமையகம் இதனை உறுதிப்படுத்தியது.

யாழ்ப்பாணம் நகர்ப் பகுதியில் பொலிஸார் நடத்திய விசேட சோதனை நடவடிக்கையின் போது குறித்த 10 பேரும் கைது செய்யப்பட்டனர்.

இதன்போது அவர்களிடமிருந்து ஐஸ் போதைப்பொருள், போதை மாத்திரைகள் மற்றும் கேரள கஞ்சா என்பன பறிமுதல் செய்யப்பட்டிருந்தன. *(ம-7)*

# நாட்டின் பல்வேறு பகுதிகளில் விபத்து

## மூவர் உயிரிழப்பு

நாட்டின் பல்வேறு பகுதிகளில் இடம்பெற்ற கோர விபத்துக்களில் மூவர் உயிரிழந்துள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதன்படி, கொட்டவில பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பண்டாரமுல்ல பகுதியில் நேற்று முன்தினம் விபத்தொன்று இடம்பெற்றுள்ளது. மாத்தறையிலிருந்து வெலிகம நோக்கிப் பயணித்த முச்சக்கரவண்டி ஒன்று முன்னால் சென்ற கார் ஒன்றை முந்திச் செல்ல முயன்றபோது அந்தக் காருடன் மோதியதுடன் எதிரே வந்த மோட்டார் சைக்கிள் மற்றுமொரு காருடனும் மோதி விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரும் பலத்த காயமடைந்து மாத்தறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் பின்னால் அமர்ந்து பயணித்தவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். உயிரிழந்தவர் அஹங்கமை பகுதியைச் சேர்ந்த 33 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

மேலும் பளை இத்தாவிலில் இடம்பெற்ற ரயில் விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மேலும் நேற்று முன்தினம் (23) மாலை மொரகஹஹேன பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கொஹேன சந்திப் பகுதியில் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் மோதி விபத்துக்குள்ளாகின. தல்கஹவில பக்கமிருந்து சவ்வுகஸ் சந்தி நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிள் ஒன்று கொஹேன வீதிக்குத் திரும்ப முற்பட்டபோது பின்னால் வந்த மற்றுமொரு மோட்டார் சைக்கிளுடன் மோதியுள்ளது.

இந்த விபத்தில் படுகாயமடைந்து ஹொரணை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்களில் 59 வயதுடைய மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் ஒருவர் உயிரிழந்துள்ளார். *(ம-7)*

# நல்லூர் சிவனாருக்கு இன்று கொடியேற்றம்

யாழ்ப்பாணம் நல்லூர் ஸ்ரீ கமலாம்பிகா சமேத ஸ்ரீ கைலாசநாதசுவாமி தேவஸ்தான (நல்லூர் சிவன் கோவில்) வருடாந்த சிவமஹோற்சவம் இன்று காலை 07.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து பதினொரு தினங்கள் பக்தி பூர்வமாக இடம்பெறவுள்ள இவ்வாலய மஹோற்சவத்தில் எதிர்வரும் 03.01.2026 சனிக்கிழமை மார்கழித் திருவாதிரை நன்நாளில் காலை 07.00 மணிக்கு ஆருத்ரா தரிசனமும் இரதோற்சவப் பெருவிழாவும் சிறப்புற இடம்பெறவுள்ளன. *(ம-7)*

# யாழ்ப்பாணப் பல்கலைப்பதியுறை

## பரமேஸ்வரன் ஆலயத்தில் திருவெம்பாவை உற்சவம்


யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகத்தில் கோவில் கொண்டு எழுந்தருளியுள்ள ஸ்ரீ பார்வதி சமேத பரமேஸ்வரன் ஆலய திருவெம்பாவை உற்சவமானது இன்று 25 வியாழக்கிழமை காலை ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து திருவெம்பாவை பத்து நாட்களும் காலை 07.00 மணிக்கு விசேட பூஜைகள் இடம்பெற்று உருத்திராபிஷேகம் நடைபெறவுள்ளது.

03.01.2026 மார்கழி திருவாதிரையன்று அதிகாலை 04.00 மணிக்கு நடேசர் அபிஷேகம் இடம்பெற்று ஆடல் அரசன் நடராஜப் பெருமானின் ஆருத்திரா தரிசனம் இடம்பெறவுள்ளது.

இத்தினங்களில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் இந்து மன்றத்தின் ஏற்பாட்டில் அதிகாலை திருவெம்பாவை, திருவாசகபாராயண கூட்டுப்பிரார்த்தனையும் முன்னெடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. *(ம-7)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாராளுமன்றத்தில் பெண்களின் அரசியல்

22

கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம். தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

சுகாதார சேவைத் துறையில் எந்த வேலைநிறுத்தங்களும் பொதுமக்களுக்கு சிரமத்தை ஏற்படுத்த அனுமதிக்கப்படாத நேரமும் அதுவாகும். அவர் 2017 இல் இறக்கும் போது மத்திய மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தார். அவர் இறக்கும் வரை அரசியலில் தீவிரமாக இருந்தார்.

### அமரா பியசீலி ரத்நாயக்கா (1977-2010)

ரத்நாயக்க முதியன்சேலாகே அமர பியசீலி ரத்நாயக்க ஒரு இலங்கை அரசியல்வாதி ஆவர். இவர் கணவரான டபிள்யூ.எம். விமலரத்ன பண்டார 1975 இல் அரசியல் எதிரிகளால் கொல்லப்பட்டார். அதன் பிறகு குருநாகலில் இருந்து அரசியலுக்கு வந்தார். அவர் வாரியபொல தேர்தல் தொகுதிக்கான ஐக்கிய தேசியக் கட்சியின் நீண்டகால (1977-2010) பாராளுமன்ற உறுப்பினராவார்.

1987-88 இல் போக்குவரத்து சபை பிரதி அமைச்சராகவும், 1988-91 இல் உள்நாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சராகவும், 1991-94 இல் பொதுச் சேவைகளுக்குப் பொறுப்பான அமைச்சராகவும், இருந்துள்ளார். 2001-04 ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தில் பெண் விவகார அமைச்சராக இருந்தார். 23 ஜனவரி 2015 - 11 ஏப்ரல் 2018 காலத்தில் வடமேல் மாகாணத்தின் 9 வது ஆளுநராக இருந்தார்.

### ராங்கநாயகி பத்மநாதன் (1980-1988)

1989 ஆம் ஆண்டுவரை தமிழ் பெண்கள் எவரும் பாராளுமன்றத் தேர்தலுக்கு முன்வரவில்லை. தேர்தலில் போட்டியிடாமலே ஒரு பெண்மணி பாராளுமன்ற உறுப்பினரானது ஒரு வரலாற்று நிகழ்வு. 1977 ஆம் ஆண்டுத் தேர்தலில் கிழக்கு மாகாணத்தின் பொத்துவில் தொகுதியின் இரண்டாவது எம்.பி.யாக எம். கனகரத்தினம் தெரிவானார். சில மாதங்களில் இவர் ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் ஐக்கிய தேசிய கட்சியில் சேர்ந்து மட்டக்களப்பு மாவட்ட அமைச்சரானார்.

இவர் மீது, 1978ஆம் ஆண்டு ஜனவரி 27ஆம் திகதி, துப்பாக்கிச்சூட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது. தாக்குதலில் ஏற்பட்ட காயங்களிலிருந்து, மிக நீண்டகாலம் முழுமையாகக் குணமாக முடியாது தவித்த அவர், 1980 ஆம் ஆண்டு ஏப்ரலில் காலமானார். அந்த வெற்றிடத்துக்கு இவரது சகோதரி ரங்கநாயகி பத்மநாதன் பாராளுமன்ற உறுப்பினராக நியமனமாகி 1989வரை அப்பதவியில் இருந்தார். ஒன்பது ஆண்டுகள் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த அவர் 1989 தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சி சார்பில் திகாமடுல்ல மாவட்டத்தில் போட்டியிட்டப் போதும் 2526 வாக்குகள் மட்டும் பெற்று தோல்வியடைந்தார்.

### தயா செபாலி சேனாதீர (1982-1988)

தயா செபாலி சேனாதீர ஒரு இலங்கை அரசியல்வாதி. ஜனவரி 1982 இல் அவரது கணவர் பந்துல ஹேவா சேனாதீர இறந்ததைத் தொடர்ந்து, கரந்தெனியாவின் ஆசனத்தை நிரப்ப ஐக்கிய தேசியக் கட்சியால் அவர் பரிந்துரைக்கப்பட்டார். 26 மார்ச் 1982 அன்று அதிகாரப்பூர்வமாக பதவியேற்றார். சேனாதீர 1988 ஆம் ஆண்டு ஜே.வி. பி இன் இரண்டாவது கிளர்ச்சியின் போது ஜனதா விமுக்தி பெரமுனாவால் (ஜே.வி.பி) அவரது வீட்டில் படுகொலை செய்யப்பட்டார்.

### ரூபா சிறியானி டேனியல் (1982-1994)

1978 ஆம் ஆண்டு ஐக்கிய தேசிய கட்சியின் பிரதி அமைச்சராக விளங்கிய அனுர டேனியல் விமான நிலையத்தில் தங்க கட்டிகளுடன் பிடிபட்டார். அதுவே இலங்கை வரலாற்றில், அரசியல்வாதி ஒருவர் தங்கக் கடத்தலுடன் பிடிபட்ட முதல் சம்பவமாக இருந்தது. இந்த தங்கக் கடத்தல் சம்பவத்தின் எதிரொலியாக 1982 ஆம் ஆண்டு இவர் தனது எம்.பி பதவியை இராஜினாமா செய்தார். அவரது இடத்துக்கு அவரின் சகோதரி ரூபா சிறியானி டேனியல் ஐ.தே.க. சார்பில் நியமிக்கப்பட்டார். 1989 வரை ஹேவாஹெற்ற தொகுதி பாராளுமன்ற உறுப்பினராக இருந்த இவர் அடுத்த தேர்தலில் தேசிய பட்டியல் மூலம் நியமிக்கப்பட்டு 1989 முதல் 1994 வரை மீண்டும் பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டார். இவர் தேசிய பட்டியல் மூலம் தெரிவு செய்யப்பட்ட முதல் பெண் ஆவர்.

### செல்வி.கீர்த்திலதா பிரேமாவதி அபேவிக்ரம (1987-1988)

கீர்த்திலதா பிரேமாவதி அபேவிக்ரம ஒரு இலங்கை அரசியல்வாதி மற்றும் இலங்கை பாராளுமன்ற உறுப்பினராவார். அபேவிக்ரம இலங்கையின் மொரவக்காவைச் சேர்ந்த படிகார முஹந்திரம் டொன் பெட்ரிஸ் பிரான்சிஸ் அபேவிக்ரம மற்றும் கத்தரினா லியனகே ஆகியோரின் மகளாவார். அவர் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து 1987 ஆம் ஆண்டு இலங்கை பாராளுமன்றத்தில் கைக்குண்டுத் தாக்குதலில் அவரது சகோதரர் கீர்த்திசேன கொல்லப்பட்டதை அடுத்து 11 செப்ரெம்பர் 1987 இல் தெனியாய தேர்தல் மாவட்டத்தின் பாராளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டார். அவர் முன்னாள் விவசாய அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சி பிரதி அமைச்சர் சுமனதாச அபேவிக்ரமவின் உறவினர் ஆவார்.

### சமந்தா தேவி கருணாரத்ன (1977-1989)

இவர் 1978-1981 இற்கும் இடையில் அன்றைய சமூக சேவைகள் அமைச்சர் அசோகா கருணாரத்னவின் அந்தரங்க செயலாளராக கடமையாற்றியிருந்தார். இவர் 1981-1988 வரை கேகாலை மாவட்ட அபிவிருத்திச் சபை உறுப்பினராக இருந்தவர். ரம்புக்கன தொகுதி பாராளுமன்ற உறுப்பினராக இருந்த இவரது தந்தை திரு அசோகா கருணாரத்தினவின் மரணத்தைத் (1988) தொடர்ந்து பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டார். 9ஆவது பாராளுமன்றத்துக்கும் (1989) போட்டியிட்டு தெரிவு செய்யப்பட்டார். இத் தேர்தலின் பின் சமூக சேவைகள் பிரதி அமைச்சராகவும் (1989-90) நியமிக்கப்பட்டிருந்தார். பின்னர் புனருத்தாபன மற்றும் சமூக சேவைகள் பிரதி அமைச்சராக 1990-94 வரை கடமையாற்றினார். இலங்கை தோட்டத் தொழிலாளர் சங்கம், இலங்கை பெண்கள் சம்மேளனம், கொரிய-சீன நட்புறவுச் சங்கம் என்பனவற்றின் மத்தியகுழு உறுப்பினராகவும் இருந்தவர்.

1972-1977 ஆம் ஆண்டுக் காலப் பகுதியில் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் ஆட்சியில் வாழ்க்கையைக் கொண்டு செல்வதற்கு கஷ்டப்பட்டு மனம் நொந்து போன மக்கள் 1977ஆம் ஆண்டுப் பாராளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு மிகப் பெரிய வெற்றியைக் கொடுத்து ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் ஆட்சியை வஞ்சம் தீர்த்துக் கொண்டார்கள். பாராளுமன்றத் தேர்தலில் மிகப் பெரும் பெரும்பான்மையைப் பெற்றுக் கொண்ட ஐக்கிய தேசியக் கட்சி தலைவர் ஜே. ஆர். ஜெயவர்த்தன 1978 பெப்ரவரி 4ஆம் திகதி இலங்கையின் இரண்டாம் குடியரசு அரசியல் யாப்பை நிறைவேற்றினார்.

இலங்கை சுதந்திரம் அடைந்தது முதல் அதுவரைகாலமும் இலங்கையின் ஆட்சியானது வெஸ்ட்மினிஸ்டர் மாதிரியிலேயே அமைந்தது. வெஸ்ட்மினிஸ்டர் மாதிரி என்பது பிரித்தானிய ஆட்சிமுறையைக் குறித்து நிற்கிறது.

தொடரும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பருத்தித்துறை...

அடையாளம் பொறிக்கப்பட்ட நிலையிலும், கறுப்பு நிற சோட்சும் அணிந்த நிலையில் சடலம் காணப்பட்டது.

மீட்கப்பட்ட சடலம் பிரேத பரிசோதனைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (ம-7;60,104,316)

## யாழ்.மண்கும்...

திணைக்களக்கத்துக்கு கோரிக்கை விடுத்தும், அத்திணைக்களம் நடவடிக்கை எடுப்பதில் தளர்வுப் போக்கு அல்லது அக்கறை இன்மை காட்டுவதாக வேலணைப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

வேலணைப்பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று பாராளுமன்ற உறுப்பினர் ஜெயச்சந்திரமூர்த்தி ரஜீவன் தலைமையில் நடைபெற்ற நிலையில், இவ்விடயம் தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட்டது.

அதன்படி குறித்த பின்னடிப்புக்கான காரணத்தை வழங்குமாறு ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரால் கோரப்பட்டது.

இதன்போது கனியவள திணைக்களத்தின் அதிகாரி கூறுகையில்,

"மண் அகழ்வு நடவடிக்கையின் போதே, தங்களால் குறித்த நபரையோ குழுவையோ சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்த முடியும். அதனால் சாட்சிகள் இல்லாது சட்டத்தின் முன் யாரையும் நிறுத்த முடியாது.

அவ்வாறு ஆதாரங்கள் கிடைத்தாலும் எமக்கான பாதுகாப்பு இல்லை. எனவே இவற்றையும் நாம் கவனத்தில் கொள்வது அவசியம். மேலும் பொலிஸாரும் கிராமசேவகரும் ஒத்துழைக்க வேண்டும் என்றார்.

துறைசார் அதிகாரியின் கருத்தை நிராகரித்த வேலணைப் பிரதேச செயலர், கிராமசேவகருக்கு இவ்விடயம் ஒரு சிறு பங்குதான், ஆனால் கனியவள திணைக்களத்தின் முழுமையான பொறுப்பு அல்லது கடமை இது சார்ந்ததாகவே இருக்கின்றது.

அதேநேரம் சட்டவிரோதமாக மண் அகழ்வு நடந்தால் அதைத் தடுக்கும் அல்லது சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தும் அதிகாரம் இருக்கின்றது. ஆனால் நாம் நடவடிக்கை எடுக்குமாறு கடிதம் அனுப்பினால் பொலிஸாரிடம் முறையிடுங்கள் என எமக்கு பதில் கடிதம் எழுதுகின்றீர்கள்.

எமக்கெழுதும் கடிதத்தை ஏன் நீங்கள் பொலிஸாருக்கு எழுதி நடவடிக்கை எடுக்க முடியாது. அது உங்களுக்குரிய பொறுப்பு" எனச் சுட்டிக் காட்டினார்.

இந்நிலையில் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் கருத்துத் தெரிவிக்கையில்,

அப்பகுதி மக்கள் ஆதாரம் தருகின்றார்கள். பிரதேச சபையும் ஒத்துழைப்புத் தருகின்றது. பொலிஸாரும் தமக்குரிய பங்களிப்பைச் செய்கின்றனர்.

சட்ட நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் அத்துறைசார் திணைக்களத்துக்கே உரியது. எனவே கனியவளத் திணைக்களம் தனது பொறுப்பை அடுத்தவர் மீது சுமத்தாது கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அந்த வகையில் அடுத்த வருடம் ஜனவரி முற்பகுதிக்குள் நடவடிக்கை எடுக்க வேண்டும்" என வலியுறுத்தினார். (ம-7)

## கஞ்சா...

கையின் போதே கஞ்சா செடி வளர்த்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

இதில் மடுகந்தப் பகுதியைச் சேர்ந்த 32 வயதான ஒருவர் கைது செய்யப்பட்டதுடன் கஞ்சா செடியும் கைப்பற்றப்பட்டது.

மேலதிக விசாரணைகளின் பின்னர் குறித்த நபரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ம-7,250)

## பேரிடரால்...

மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

டித்வா அனர்த்தத்தினால் அதிக பட்சமாக நன்னீர் மீன் வளர்ப்பு மற்றும் ஏற்றுமதித் துறைக்கே 5,850 மில்லியன் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டார்.

குறிப்பாக அலங்கார மீன்கள், இறால் மற்றும் கடல் அட்டை வளர்ப்புத் துறைகள் இதனால் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளன.

எவ்வாறாயினும் அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட முன்கூட்டிய எச்சரிக்கைகள் காரணமாகப் பாரிய உயிர்ச் சேதங்கள் தவிர்க்கப்பட்டதாக அமைச்சர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதியுடன் நடத்தப்பட்ட ஆலோசனைகளைத் தொடர்ந்து, பாதிக்கப்பட்ட மீனவர்களுக்குப் படகுகளைத் திருத்துவதற்கும் புதிய உபகரணங்களைப் பெற்றுக்கொள்வதற்கும் பல்வேறு சலுகைகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

அதன்படி முழுமையாகப் பாதிக்கப்பட்ட படகுகளுக்குக் காப்புறுதித் தொகையுடன் குறைந்த வட்டியில் கடனுதவி வழங்கப்படவுள்ளதுடன் பகுதியளவில் சேதமடைந்த அனைத்துப் படகுகளையும் சீ-நோர் (C-Nor) நிறுவனம் அந்தந்த இடங்களிலேயே இலவசமாகத் திருத்தித் தரும்.

மேலும் வலைகளை இழந்த 1,200-க்கும் மேற்பட்ட கடல் மீனவர்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாய் பெறுமதியான வவுச்சர்களும் 6,000 நன்னீர் மீனவர்களுக்கு தலா 75,000 ரூபாய் வரையான நிதியுதவியும் வழங்கப்படவுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார். (ம-7)

## பொலிஸ்...

பொலிஸார் கார் ஒன்றினைத் துரத்திச் சென்றனர். அந்தக் கார் மூத்தநயினார் கோவிலுக்கு அருகாமையில் உள்ள தையல் கடை மற்றும் வேறு ஒரு கடையின்மீது மோதி விபத்து சம்பவித்துள்ளது.

இதன்போது தையல் கடையில் இருந்து கதைத்துக் கொண்டிருந்த மூவர் படுகாயமடைந்ததுடன், அவர்களில் ஒருவரது நிலை கவலைக்கிடமாக உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

படுகாயமடைந்த மூவரும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்ப்பிக்கப்பட்டனர். காரைச் செலுத்தி வந்த சாரதி மானிப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அத்துடன் இரண்டு கடைகளும் மூன்று தையல் இயந்திரங்களும் சேதமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. மானிப்பாய் பொலிஸார் துரத்தி சென்றதாலேயே வேகக் கட்டுப் பாட்டை இழந்த கார் இவ்வாறு விபத்தை ஏற்படுத்தியதாக அங்கிருந்தவர்கள் தெரிவிக்கின்றனர்.

குறித்த இடத்தில் பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் மற்றும் பொலிஸார் குவிக்கப்பட்டு பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது. (ம-7,104)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

மஹஜன சம்பத
திகதி 2025.12.24
சீட்டிழுப்பு இலக்கம் 6053
L 0 9 1 5 7 6
அத சம்பத
L 1 5 7 6
சீட்டிழுப்பு இலக்கம் 0628

சுப தவசக்
திகதி 2025.12.24
சீட்டிழுப்பு இலக்கம் 160
மீனம் 32 40 50 8233

தன நிதானய
திகதி - 2025.12.24
சீட்டிழுப்பு இலக்கம் - 2083
N 18 46 70 79 N

மெகா பவர்
திகதி 24/12/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2401
T 18 25 42 64 80

ஜய
திகதி 2025.12.24
சீட்டிழுப்பு இலக்கம் 0321
F 2 1 5 9

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4295
சீட்டிழுப்பு திகதி 24.12.2025
G 14 35 70 80
G

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.12.24
சீட்டிழுப்பு இலக்கம் 1362
கும்பம் 19 21 30 39 கும்பம்

உத்தியோகபூர்வ முடிவுகள்
சுப்பர் பல் சம்பத
24.12.2025 வெற்றி வாரம் 0761
S 4 7 4 0 4 2
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.31,228,255.20

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 3027
சீட்டிழுப்பு திகதி 2025.12.24 தினம் புதன்கிழமை
01 09 33 40 K
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.83,985,060.00

சனிதா
திகதி 24.12.2025 வெற்றி வாரம் 5188
19 31 69 72 B
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 70,771,698.40

சசிரி
வெற்றி வாரம் 857
சீட்டிழுப்பு திகதி 24.12.2025 புதன்கிழமை
18 23 43
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.2,000,000.00

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4739
சீட்டிழுப்பு திகதி 24.12.2025 தினம் புதன்கிழமை
11 19 21 31
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.6,866,356.40

கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
T 12 11 16 26 63
2203
24.12.2025 புதன்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.615,319,101.40

அத கோடிபதி ADA KOTIPATHI
புதன்கிழமை
வெற்றி வாரம்: 2853
சீட்டிழுப்பு திகதி: 2025.12.24
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.70,599,677.60
12 19 23 37 E


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழர்களின் ...

காணொளி ஒன்றை வெளியிட்டே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அக்காணியில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது,

தற்போது தையிட்டி விகாரை அமைக்கப்பட்டுள்ள காணியானது காங்கேசன்துறை தையிட்டிப் பகுதியைச் சேர்ந்த பொதுமக்களுக்குச் சொந்தமானதாகும்.

யுத்த காலத்தின் போது சிவில் மக்களின் காணிகள் கைப்பற்றப்பட்டன. அதன் பின்னர் அங்கு சட்டவிரோதமாகவே திஸ்ஸ விகாரை நிர்மாணிக் கப்பட்டுள்ளது.

இந்த உண்மையை இங்கு யுத்த காலத்திலிருந்து மிக நீண்ட காலமாக வாழும் நாக விகாரையின் விகாராதிபதியான எனக்கு மட்டுமே தெரியும்.

ஆகவே எமது நாட்டிலுள்ள மக்கள் இந்த விடயம் தொடர்பில் தேவையற்ற சிக்கல்களை ஏற்படுத்திக் கொள்ளத் தேவையில்லை. விடயங்களை ஆராய்ந்து நாம் செயற்பட வேண்டும்.

இந்த நிலையில் வடக்கு பிராந்தியத்திற்கான பிரதான சங்கநாயக்க தேரருக்கான பதவியைப் போலியாக அமைக்கப்பட்டுள்ள திஸ்ஸ விகாரையின் விகாராதிபதிக்கு பெற்றுக் கொடுத்துள்ளனர். பௌத்த தர்மத்திற்கு மாறாக அவருக்கு அந்தப் பதவி வழங்கப்பட்டுள்ளது.

நான் 53 வருடங்களாக இங்குள்ள தமிழ் மக்களுடன் நயினாதீவிலேயே தங்கியுள்ளேன். மிகவும் சமாதானமாகவும் அன்பாகவும் தமிழ்ச் சகோதரர்களுடன் நாங்கள் ஒன்றாக வாழ்கின்றோம்.

எனினும் தற்போது தையிட்டிப் பகுதிக்குத் தேரர் ஒருவர் வருகைதந்து, தமிழ் மக்களின் காணிகளை அடாத்தாகக் கையகப் படுத்தி விகாரைக்கான புதிய கட்டடங்களை நிர்மாணித்து வருகின்றார். இவ்வாறான செயற்பாடுகள் முன்னெடுக் கப்படக்கூடாது என்பதே எமது நிலைப்பாடு. எனவே இலங்கைவாழ் அனைத்து மக்களும் எவ்வித சிக்கல்களையும் ஏற்படுத்திக் கொள்ளாது சிந்தித்துச் செயற்பட வேண்டும்.

அரசாங்கம் இந்த விடயத்தில் தலையீடு செய்து நடவடிக்கை எடுப்பது சிறந்தது என்பது எனது கருத்தாகும்.

இந்த விடயம் தொடர்பில் தேவையற்ற வகையில் கருத்துக்களைப் பகிர வேண்டாம் என ஏனைய தேரர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

அனைவரும் ஒன்றிணைந்து கலந்துரையாடித் தீர்வைப் பெற்றுக் கொடுக்க வேண்டும். அல்லாவிடின் இந்த விடயம் பெரும் பூதாகரமாகும்.

அதன்போது தமிழ் மக்களுடன் இணைந்து செயற்பட வேண்டிய தேவை எங்களுக்கு ஏற்படும் என்பதைக் கூறிக் கொள்கிறேன் என அவர் அந்த காணொளியில் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## ரூ.200 கோடி ...

கைப்பற்றப்பட்ட நெடுநாள் மீன்பிடிப் படகிலிருந்து 21 கிலோகிராமிற்கும் அதிகமான ஹெரோயின் மற்றும் 172 கிலோகிராம் 'ஐஸ்' போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது.

இந்தப் போதைப்பொருள் தொகையின் பெறுமதி சுமார் 200 கோடி ரூபா எனப் பாதுகாப்புப் பிரதி அமைச்சர் அருண ஜயசேகர தெரிவித்தார்.

கடந்த 9 ஆம் திகதி கந்தர பிரதேசத்திலிருந்து 5 மீனவர்களுடன் கடலுக்குச் சென்ற குறித்த மீன்பிடிப் படகு,போதைப்பொருளைக் கடத்திச் சென்று கொண்டிருந்த போதே நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கடற்படையினரால் கைப்பற்றப்பட்டது.

நேற்று புதன்கிழமை காலை 6 மணியளவில் டிக்கோவிட்ட மீன்பிடித் துறைமுகத்திற்குக் கொண்டு வரப்பட்ட இப்படகிலிருந்து, 'ஐஸ்' மற்றும் ஹெரோயின் போதைப்பொருட்கள் அடங்கிய 11 பைகள் மீட்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ம-7)


## மணப்பெண் தேவை

01.பளை, இந்து, 1988, அனுசம், Inventory officer, Canada citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (30529)

02.கோண்டாவில் - மண்டைதீவு, இந்து, 1989, மூலம், MBBS Doctor மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.

03.அல்வாய், இந்து, 1990, ரோகிணி, Charted accountant மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (42381)

04.நயினாதீவு, இந்து, 1991, சதயம், Bachelor, Newzealand citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.(28920)

05.நீர்வேலி, இந்து, 1992, அவிட்டம், Bachelor, UK citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.

06.கொக்குவில் - உடுவில், இந்து, 1988, திருவோணம், Civil Engineer, Australia citizen, Divorce மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.

07.கரவெட்டி, இந்து, 1993, பூரட்டாதி, Civil Engineer, Singapore மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.

08.திருநெல்வேலி, இந்து, 1994, ஆயிலியம், Bsc in computer science, UK citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (34159)

09.கொக்குவில், இந்து, 1992, அனுசம், Aca[UK], BBA[Australia], Bsc LLM[UK], UK citizen, Divorce மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (34763)

நீங்களாகவே எமது www.thaalee.com என்கின்ற website இல் உங்களுக்குப் பொருத்தமானவர்களைத் தெரிவு செய்து கொள்ளலாம். எல்லா விதமான ஜாதியிலும், Unmarried, Divorce என்பன உண்டு. (C-4666)

S.Sharma J.P — www.thaalee.com — 077 539 3728 — 077 803 8193

Architecural CAD Centre
Reg. No:NAL/DS/1391-Jaffna
Personal & Group Classes
2D-Drawing & 3D Modeling
Auto CAD
NVQ 4 5 6
Engineers, Architects, Surveyors, Draughtsmans, Drafting Students, Engineering Students, Technical College Students
Lecture by:Mr.K.N.Mugunthan(D/A)
Cert.in Auto CAD Software(2d&3D)
University of Peradeniya
Cert.in Advance 3D Modeling in Auto CAD
University of Moratuwa
Link: 0775116320 0718617972
(C-4664)

## வாடகைக்கு உண்டு

தெல்லிப்பளை வைத்தியசாலை வீதியில் ஸ்ரோரஸ், ரியூசன், கோழிப்பண்ணை செய்வதற்கேற்ற வகையில் கட்டடம் ஒன்று வாடகைக்கு உண்டு.
விரும்புவோர் தொடர்புகொள்ளவும்.
தொடர்புகளுக்கு: 077 580 9733 (6378)

## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் பிரபல ஐஸ்கிறீம் நிறுவனம் ஒன்றிற்கு வேலையாட்கள் தேவை.
(ஆண், பெண் இருபாலரும்)
- சிற்றுண்டி பரிமாறுபவர்
- விற்பனைப் பிரதிநிதி
- துப்பரவுப்பணியாளர்


தங்குமிடவசதி வழங்கப்படும்.(ஆண்)
தொடர்புகளுக்கு: 077 711 1410 (6351)

## யாழ்ப்பாணத்தில் Voyzant

கனடாவை தலைமையகமாகக் கொண்ட உலகளாவிய "வொய்சன்" நிறுவனத்தின் சேவைகள்
- விமான பயணச்சீட்டுக்கள்
- பயணக் காப்புறுதி
- விசா சேவைகள்
- வெளிநாட்டு சுற்றுலா

மேலதிக விபரங்களுக்கு: Voyzant(PVT)Ltd
No:617&619, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.
(OLR Church இற்கு அருகில்)
077 284 9535, 021 222 6866 (6308)

## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 17 . 10 . 1949 — மறைவு 20 . 12 . 2020

அமரர் சோமசுந்தரம் புவனசுந்தரம்

திதி : சஷ்டி

கண்முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எம்முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும் - அப்பா
ஆண்டு ஐந்து ஆனாலும்
உம் நினைவுகள் அழியவில்லை - அப்பா
மண் விட்டு மறைந்து நீங்கள்
விண்ணோக்கிச் சென்றாலும்
கண் விட்டு மறையாமல்
கனகாலம் எம்முடன் இருப்பீர்கள் - அப்பா

(C-4663)

நாகலிங்கம் வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

குடும்பத்தினர்

## வேலைவாய்ப்பு

ReeCha PAPERS

அச்சுவேலி கைத்தொழிற்பேட்டையில் அமைந்துள்ள கடதாசி உற்பத்தி மற்றும் பொதியிடும் நிறுவனத்திற்கு பின்வரும் பணிநிலைக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

உற்பத்தி மேற்பார்வையாளர் (Production Supervisor)

அடிப்படைத் தகுதிகள்
- ஆகக்குறைந்து க.பொ.த. உயர்தர பரீட்சையில் சித்தி பெற்றவராக இருத்தல் வேண்டும்.
- உற்பத்தி மற்றும் தயாரிப்பு பொறியியல் துறையில் டிப்ளோமா (Diploma) பட்டம் பெற்றிருத்தல் மேலதிக தகைமையாக கருதப்படும்.
- 30 வயதிற்கு மேற்பட்டவராயிருத்தல் வேண்டும்.
- ஆகக்குறைந்து 5 வருட வேலை அனுபவம் இருத்தல் வேண்டும்.
- பகல் மற்றும் இரவு நேரப்பணிகளில் (Day Shift and Night Shift) ஈடுபடக்கூடியவராக இருத்தல் வேண்டும்.

விண்ணப்பிக்க:
தங்களது சுயவிபரக்கோவையினை (CV) தரப்பட்டுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும் :
hrreechapapers@gmail.com

மேலும் தொடர்புகளுக்கு: Reecha Papers (Pvt) Ltd Industrial Estate, Atchuvely, Jaffna
0755373472 / 0212213000 (6389)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.12.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.